உ

துர்க்காபரமேஸ்வரி துணை.

# ஸ்ரீ சொக்கநாதர்

# பிட்டுக்குமண்சுமந்த சரித்திரம்.



மயிலை-கன்னியப்பமுதலியா ரவர்களால்,

சென்னை ஆனை,

ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

ரிஜிஸ்டர்-காப்பிரைட்.

[அணா, 5.

22 APR 1922

௳23:417
N22
120058

## ஸ்திரீகள் பக்தவிஜயமென்னும்

# பதிவிரதைகள் சரித்திரம்.

நண்பர்களாள் ! "இல்லறமல்லது நல்லறமன்று" என்று பெரியோர்
வாக்கின்படி இல்லறமே துறவரத்தைவிட மேலானதென்று சொ லப்பட்
டிருக்கிறது. அத்தகைய இல்லறத்தை செவ்வையே நடாத்த நற்குணம்
வாய்க்கப்பெற்ற மனைவிகள் கிடைக்கப்பெறுவதே நாம்செய்த பாக்கி
மென்று எண்ணவேண்டும். அப்படி கிடைக்கப்பெறினும் அவர்கள் த
கள் கணவரிடம் ஒழுங்காய் நடந்துக்கொள்ளாமை அன்னவர்களின் அறி
வின்மை என்றே நாம் கருதவேண்டும். ஆகையினாலேதான் பெண்கல்வி
அவசியம் வேண்டும். அத்தகைய கல்வியினால்தான் மேல்நாட்டார் அதிக
செல்வமும் சிறப்பும்பெற்று விளங்குகின்றனர். நாமும் அவ்வண்ணம்
அடையவேண்டின் நாம் அன்னவர்களை நல்லொழுக்கம், தெய்வபக்தி,
கணவருடன் அன்புமுதலியவைகளையடைய நமது புராதனமாகிய புராண
இதிகாசங்களை வாசிக்குமாறு செய்யவேண்டும். ஆனதுபற்றியே மேற்
கண்ட திவ்விய சரித்திரத்தை நாம் அச்சிட்டு வெளியிட்டனம். இதில்
16 மகா உத்தமிகளின் திவ்வியசரித்திரம் தெளிவான வசனநடையில் எழு
தப்பட்டுள்ளது ஒவ்வொரு சரித்திரம் வாசிக்க வாசிக்க அன்னவர்களின்
அறிவு விர்த்தியடைந்து இந்த சம்சார சாகரமாகிய இல்லறத்தை செவ்வ
னே தன்கணவருடன் ஒத்துவாழும் பயனை தருமென்றே நம்முடையகருத்
து. ஆகையாலிதை ஒவ்வொருகுடும்பத்திலும் ஆண்பெண் இருதிறத்தாரும்
வாசிக்கவேண்டியதவசியம். இப்புத்தகம் சுமார் 400-பக்கம்கொண்டது.

**விலை ரூபா 1. வி பி சார்ஜ் பிரத்யேகம்.**

**மலையாள மாந்திரீக ரத்னாகரம் 8 பாகம் விலை ரூபா 1.**

### தலைவாங்கி அபூர்வசிந்தாமணி

இது ஓர் அற்புதமான செந்தமிழ்நாவல். இதில் ஸ்திரீ, புருஷ, பாலக,
பாலகிகளுக்கு யுக்தமான அநேக அதியற்புத விஷயங்களும், பலநீதிகளும்
ஒருங்கே யமையப்பெற்று, படிக்கப்படிக்கப் பரமானந்தத்தையும், கேட்
கக் கேட்க இன்பத்தையுந் தரும்படி மிகத் தெளிவாய் எழுதப்பட்டிருக்
கிறது. இக்கதாநாயகியினால் கேட்கப்படும் மூன்று வினாக்களும், மெய்
யழகனெனும் அரசகுமாரனால் அளிக்கப்படும் விடைகளும் மிகவும் ஆச்
சரியமாயிருக்கும். விலை ரூபா 1.

### சௌந்தராபாய்

இது ஓர் நவீன துப்பறியும் நாவல், இதில் விவரித்திருக்கும் சதி கொ
லையும், கொலைக்குப் பிரயத்தினங்களும், கொலையாளிகளின் கொடிய
செய்கைகளும் ஆச்சரியமானதுடன் இதில் அநேக அற்புத நிகழ்ச்சிகளும்
விவரித்திருக்கிறது. விலை ரூபா 1.

உ

க்காபரமேட்டித் துணை.

அதிநூதன

# ஸ்ரீ சொக்கநாதர்

## பிட்டுக்கு மண்சுமந்த சரித்திரம்.

இதில் ஹிந்துஸ்தான், பார்ஸி, திருப்புகழ் காவடிச்சிந்து
வர்னமெட்டுக ளடங்கியிருக்கின்றன.
இச்சரிதை முற்றிலும் டிராமாடிக் கம்பெனியார்கள்
உபயோகிக்கும் வண்ணம்,

---

திருவாளொளிப்புத்தூர்
ம-ா-ா-ஸ்ரீ, குருசாமி உபாத்தியாயர் குமாரர்,
தங்கமெடல்பெற்று புகழ்வாய்ந்த, வித்வ விரோன்மணி
**T. G. கலியப்பெருமாள்**
உபாத்தியாயர் இயற்றியதை,

---

நா. சரவணமுதலியார் விருப்பத்தின்படி,
மயிலை-கன்னியப்ப முதலியா ரவர்களால்
சென்னை சூளை,
லஸ் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப் பெற்றது.
1921.

ரிஜிஸ்டர் காபிரைட்.

# ரி[illegible]ஸ்டர் அறிவிப்பு,

இதனுல் சகலருக்கும் முக்கிய அறிவிப்பு யாதெனில், ஸங்க ஜடாதர காளகண்ட திரிநேத்திர தாரியினராகியும் அடியவர்கட்கடிமையாக அருளைப்பாலிக்கும் வானமுதமான ஸ்ரீசோமசுந்திரக்கடவுள் எழுந்தருளி விளக்கமுறும் ஆலவாய்ப் பதியென்னும் மதுரைமாநகர் ஸ்தலத்தை ஞாலத்தோர் கண்மனம் வாய் கரம் கால் சிரம் இவைகள் உணர்ந்து பேரானந்தசாகரத்திற் மூழ்கும் வண்ணம் பண்டைகாலையிற் ஸ்ரீபரஞ்சோதிமஹாமுனிவர் ஸ்ரீசோமசுந்திரபெருமான் க்ருபை அனந்தத்தையும் ஓர் நந்நூலிற்திரட்டி அந்நூலிற்கு திருவிளையாடற் புராணமென வரைந்தவற்றிலுள்ள நரிபரியாக்கிய படலமுதற் பரிநரியாக்கியபடலமும் முடிவிற் பிட்டுக்கு மண்சுமந்தபடலமுட்பட இம்மூன்றையும் ஓகாரணத்திற்கு விர்த்தாந்தமாக சேமித்து ஸ்ரீ மதுரை சொக்கநாதர் பிட்டுக்கு மண்சுமந்துப் பிரம்படிப்பட்ட சரித்திரமென நூற்பெயர்சூட்டி மேற் பிரபந்தத்தையே தற்கால நாகரீகத்திற் ஹேதுவாய் டிராமாடிக் கம்பெனியார்கள் உபயோகித்து உலகத்தவர் செவியுடன் நேத்ரானந்தம் அடையும்வண்ணம் பலவித இராகதாளங்களுடன் அதியற்புத வசனங்களுடனும், மாயவரம்தாலுகா திருவாளொளிப்புத்தூர் ம-ா-ா-ஸ்ரீ, வித்வஸிரோன்மணியென அநேக கல்வியாளர்களும் பெரியோர்களும் பெயர்வழங்கி புகழுற்ற, கு—கலியப்பெருமாள் உபாத்தியாயராற் பாடப்பெற்றுள்ள இச்சரிதையை மயிலை—கன்னியப்ப முதலியாராகிய யான் சகலசுதந்தரத்தையும் பெற்றுக்கொண்டபடியாற் இச்சரிதையை என் அனுமதியன்னியிற் வேறு ஒருவரும் அச்சிடலாகாதென கனம் கவர்ன்மெண்டார் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

**மயிலை—கன்னியப்பமுதலியார்.**

# சிறப்புப்பாயிரம்.

தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம்தாலுகா ஈச்சம்பூண்டி

ஸுந்தரராஜுலு உடையார் இயற்றிய

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

வந்திமனத் திடர்நீங்க வலியவந்து பிட்டமுது வாங்கியுண்டு
சுந்தரனே தன்றலையின் மண்சுமந்த விளையாட்டின் றாயக்காதை
செந்தமிழிற் சரிதமென வியற்றினன்காண் றிருவாட்கொள் புத்தூர்மேவ
வந்தகுரு சாமியருட் கலியபெருமாளெனுஞ் சீர்மாண்புளானே.

உ

[...]ருக்ஷிஸமேதரன் துணை.

ஸ்ரீமதுரை சொக்கநாதர்

# பிட்டுக்கு மண்சுமந்த

## சரித்திரம்.

### விநாயகர் காப்பு.

வெண்பா.

கருணைதரு மாமதுரை கர்த்தன் சரிதைதனை
தெருணிறைந்தப் பாவணியார் செப்ப—அரவணையோன்
சக்கரத்தை யுள்விழுங்க தஞ்சமெனு மாற்கீந்த
கைக்களிரின் மாமுகனே காப்பு.

---

### விநாயகர் ஸ்தோத்திரம்.

(வேலவனை நிதமும் நினைமனமே) என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மூழிகமீதமருங் கெஜமுகனே—வா (மூ)

அநுபல்லவி.

ஏழுலகுங்கோரி தாளிற்பணியவே
வாழுமுனதழகான கழலிணை
ஏழைதழுவிட வேழமொடுதிரு (மூ)

சரணங்கள்.

தேவாதிதேவர் துதிக்கும் பிரகாசனே
தேவிவல்லபைத் திருமணவாசனே
சேவற்கொடியோன் றுணைநின்ற நேசனே
சிவதத்வமெதுவெனவுன்னக்குரு
தவமிவனருமகனென்னத்திரு (மூ)

வந்தித்தனக்கென்று மண்ணைச்சுமந் திட்டு
வஞ்சகமாக வுதிரச்செய்த பிட்டு
எந்தைசொக்கேசர் எனக்கெனப் பெற்றிட்டு
இன்பமுடனுசி கண்டவர்சரிதை
செந்தமிழ்கவிஞனின்பதம்புகல (மூ)

வேலின்மயிலோன்பிந்த தாதைதமைவலம் வந்த
மாலின்மருகனுந்தனி ஞவலாலே இந்த
ஞாலம்புகழ்கலியப்பெருமா ளென்றனை நீ ரெந்த
நாளும்எனையாளுங்குறைகேளும்
துணைவாருந் திரு (மூ)

---

திருச்சிற்றம்பலம்.

திருவாளொளிப்புத்தூர் என்றும், திருஆட்கொளிபுத்தூர்
என்றும், வாழப்பூர் என்றும், அரதனபுரமென்றும்
சிலகாரணப்பெயர் பெற்றுள்ள மஹாக்ஷேத்
திரத்தின்கண் விளங்கும் வண்டமர்ஸமேத

## மாணிக்கவண்ணேஸ்வரர் துதி.

திருவிருத்தம்.

தேவாரப் - பண்.

ஊழ்வினையகற்றவல்ல வுண்மையாமருந்தொன்றத்தை
பாழ்மனமிந்நாட்கண்டுப் பருகிடவழியற்றிந்தச்
சூழ்புவித்தலங்கடோறுஞ் சுற்றிநீபலேந்ததாலென்
வாழ்கொளிபுத்தூரானென் மருந்தினைமறந்ததென்னே.

தாழ்வினையகற்றுமப்பன் சகலமன்னுயிர்க்குமப்பன்
வாழ்குகன்றனக்குமப்பன் வானவர்க்குகந்தவப்பன்
ஊழ்வினைபயன்றவப்ப னுந்தனுக்கிவனேவப்பன்
வாழ்கொளிபுத்தூரானென் மாணிக்கமப்பன்றானே.

வேழமுகத்திருசுதனைப் பெற்றுள்ளானை, விஜயனரிசம்பந்தர் பூஜித்தானை, தோழமைசுந்தரருடனே நட்புற்றானை, தொண்டனரு பதின்மூவர்க்கருளீந்தானை, விழகரி தனையுரித்துப் போர்த்திட்டானை, வேதமரிபிரமர்தனக் கெட்டாதானை, வாழப்பூர்தனிற் விளங்கும் வானோர்கோனை, மாணிக்கத் தேவனை யான்மறந்திலேனே.

அரவமாபரண[illegible]மன வணிந்திட்டானை, யமரர்களுக்கன் றமுது விருந்திட்டானை, [illegible] சனிற்கங்கைதனைச் சுமந்திட்டானை, திரிபுராதியை நகைத்துத்[illegible]கித்திட்டானை, கரமதனிற் கபாலமழுவேந்தினானை, கருணைபெறதுர்க்கையன்றுப் பூஜித்தானை, வரமருளு மரதனமாபுரத்துளானை, மறவாதார் என்றனும் பிறவாதாரே.

அரிபிரமற்கெட்டாத வானந்தமணியை யரூபியென விளங்கு மந்த வந்தரங்கமணியை, கரிமுகனைபெற்றுள்ளக்கயிலைநவமணியை கண்மணியை நன்மணியை கனகரத்னமணியை, பெரியோருள்ள மகலா பேரின்பமணியை பிறையணி செஞ்சடைமணியை பிறப்பகற்றுமணியை, தெரிவையர்வண்டமர்கிசைந்த மாணிக்கமணியை தெரிசித்தோர் விழியிரண்டுந் தெய்வசிகாமணியே.

திருச்சிற்றம்பலம்.

---

## வண்டமர்பூங்குழர்பேரிற் ஆசிரிய விருத்தம்.

திருபுரத்திச்சிரணத்தித் திங்கட்சூட்சி
திருவாழப்பூரிலெழுஞ் சிவப்பறைச்சி
பரசிவத்தினொருபுரத்திற் பாகங்கொண்ட
பராசத்தித்திருகரத்திப் பதிவேடச்சி
அரிபுரத்திக் கிரீடத்தியாதிசோதி
யம்பலத்திப்பூரணத்தி யழகாண்டிச்சி
மரகதத்திதிருவுரத்தி மதிவன்னிச்சி
மகிதலமெலாம்படைத்த மாவிடைச்சி
பருவதத்திமலர்பதத்தி விடகண்டத்தி
பாலவடிவேலனுக்குத் தாய்குறத்தி
நிறைதனத்திவிரிபுயத்தி நிகரில்லாத
நிட்களத்திசதானந்தி நிறைசெட்டிச்சி
திருமுகத்தியகண்டத்தி சூட்சமத்தி
செங்கண்மால்தங்கச்சி செம்படத்தி
விரிவாகைவனபுரத்தி லெழுந்தவிண்டு
விடையவள்வண்டமரென்னும் விமலிபோற்றி.

---

## சுப்பிரமணியர் ஸ்து

(ஜப்தகலந்தரு) என்ற வர்ன டு.

இராகம்-பாரீஸ்-தாளம்-ஆதி.

ஜண்பக நிறகுர மங்கைய ரொடுதிர
தங்க மயிலினொடு வா—வா—வா
தாண்டவபாலா ஸரவணபவசிவ
ஸண்முகமுன்கழற் தா—தா—தா
சுகா- நந்தம்பெற்றிட சுந்திரனுன்சமு
கந்தனை நாடிடு மென
மேம்லோவீண்ஜால மாகிடலாகா
ஜல்திநானேவல்வினை பகலதயங்கிமபங்குகிறேன்(ஜண்)

குஞ்சரிமருவிடு சங்கரிதிருசுத
னுன்பதகிண்கிணி ஹா—ஹா—ஹா
சந்ததமென்செவி யின்படமுன்பவம்
செந்தணவிடுமெழு காகாதா
பெரு- தஞ்சமென்றுந்தனை நம்பினேனருள்சு
தன்கலியப்பெரு மாள்
வேலாவீண்ஜால மாகாதுவாரும்
வீராதீரா சூராவருவீர் வேலணிமான்மருகா(ஜண்)

---

## திருமாற்பேரிற் நிந்தாஸ்துதி.

இராகம்-சங்கராபரணம்- தாளம்-ரூபகம்.

பல்லவி.

நீர்தானே லோககாரணனென்றுரைப்பவர் (நீர்)

அநுபல்லவி.

பாரெங்கும்நகைத்திட பாற்றயிற்றிருடிய
பேரினுக்கஞ்சிகடற் நீரினுள்ளொளித்திட்ட (நீர்)

சாணளவின்வயிற்றை தானடக்கவொண்ணுமற்
வீனுக்குலகைவாரி வாணனைநிறப்பிய (நீர்)

ஆமென்றுலகரிந்தும் ஈசன்றனக்குகந்த
வானேறரிய அய்ய ஞரையீன்றெடுத்திட்ட (நீர்)

போதுங்காணர்ஜுன      னின்றேரின்பாகனுமாகி
தூதும்போயனுக்கிட்ட      பாதந்தானேகிருபை (நீர்)

சூதனெவுரைய      தாதன்றனைபோலன்று
ஏதுகெடுத்துத்தப்பை      தா-தா-வென்றடித்திட்ட (நீர்)

தேளின்றனைபயந்தீர்      மார்பினடுவதனிற்
தாலித்தரித்தமாதை      தாங்கவிதியோஅய்யா (நீர்)

சீலன்கலியபெருமாள்      மானுந்தனைஇவ்வித
மேனுக்குறைத்ததல்லார்      வீணேமோஇவைசொல்ல (நீர்)

---

## ஸ்ரீமாணிக்கவண்ணேஸ்வரர் பேரில் நிந்தாஸ்துதி.

(பூமிமெச்சிடும் என்ற காவடிச்சிந்து வர்னமெட்டு.)

ஜீவரெத்னபுரி      ஈசனென்றேபுகழாகிடும்
மகிழ்வாகிடும்      அழகேகிடும் —ஹரி
துதிசெய்மாணிக்கமுன் பெருமைதன்னைப்பூவிற்
கூறுவேன் கடைத்தேருவேன்

ஆவலுற்றத்தவத்      தோர்துதிக் கும்புகழ்
சுந்திரன் நீரோசங்கரன் உமக்கைங்கரன்—மகன்
யானைமாமுகமும் யானைபோற் வயிரும்
மானதாற் குறைவானதாற்

மாணிலத்தவர்களோநகைக்கவிதி
யானதேகுறை வானதே உயிரேனிதே—என
மாளஎண்ணி விஷமோ வருந்தவிது
வாகுமோ பெயர்போகுமோ

வேலவனுமகனவ்      வேடமாதுதன்னை
கொண்டதாற்      மனம்விண்டதாற் புவிகண்டதாற் நீர்
வீழுமூங்கிலினிற் பொயொளித்தலென்
னகுமோ குலமேவுமோ

மனைவிபார்வதியுடன் மைந்தரோ பசியின்
வாதையார் அதனுகையார் மிகவேதையார்—அன்று
விறகுகட்டை சிறமதனிற்வைத்து கூடற்
ஏகினீர் விலை கூறினீர்

பிரமனோர் தலையை மனைவியாற்றரித்த
பாபத்தார் பரி தாபத்தார் எவர் சாபத்தார்—அந்தோ
பாண்டியனார் பிரம் பாலடி முதுகினிற்
பட்டதோ விதிவிட்டதோ

காலனார் தனையுன் பாதத்தாலுதைத்த
காரணமிதகாரணம் இத்துதாரணம்—மந்த
காண்டிபன்சிலையி னாலடித்த புண்பட்
டாறிற்றோ பெயர் மாறிற்றோ

---

## ஸ்ரீசொக்கநாதர் ஸ்துதி.

விருத்தம்.

உள்ளமெனுநிலமதனிற் ஊக்கமெனுமேரதனாலுழவுசெய்து
எள்ளளவுமழிவில்லா வன்பதனாற்வேலியிட்டு இசையாமோன
முள்ள தனைவிதைபுதைத்து வானந்தக்கண்ணீராற்முளைத்தப்பூவை
வள்ளலெனுஞ்சொக்கேசர் மலரடியிலற்ஜித்துவணக்கம்செய்வாம்.

---

## ஸ்ரீமீனாட்சியம்மன் ஸ்துதி.

கலித்துறை.

வானோர்களாக்ஷிப்புரிந்திட்ட வள்ளலைமணந்திட்டதிம்
மானோர்புதல்வனை யென்றெடுத் தாடம்மஹானுபவன்
தானோர்பிரணவந்த மானுதவியாற்றெளிந்ததுபோற்
நானோர்புதல்வன்மீ னாக்ஷிநம்பினேன்நலமருளே.

---

# மதுராபுரி நகர்ச்சிறப்பு.

வெள்ளிமலையொத்த என்ற வர்னமெட்டு.

தேவர்தொழு மாமதுரை நகரம் புவி
தீர்த்தமெவை கட்குமிது திலதம் அதிற்
ஜென்மித்து இறந்தவர்முன் கன்மத்தைத்துறந் தவரொன்
றுரைக்கும் மறைநிறைக்கும்

வானவ ரனு...முங் கூடி யாடும்
வாவிகளிற்ஜோடி யன்னந்தேடி தாவி
வந்திரங்கிக்கும்பலுடன் தங்கிநின்றலையுடனே
சுழலும் பூவிற்வுழலும்

தாமரைப்புஷ்பங்க ளலங்கார மதைச்
சார்ந்திடும்வண்டுகளோ ரீங்காரம் செய்த
சாமவேத மோதிசொக்கர் தாள்பணிதற் போலுமிசைந்
தொலிக்கும் நிறஞ்ஜாலிக்கும்

பொற்குவியர்போலும்பல கோபுரம் அதிற்
வச்சிரவொளியதுபோற் வாரிடும் நளன்
இச்சையுற்றுப் பச்சையொற்றி வைத்தமைத்தசப்தவாயிற்
ஏறிடும் வானை தாவிடும்

---

## ஷை மெட்டில் முடுகு.

அற்புதநவமணி பற்பலவகைதுகைமேடைமேற் அதிற்
சிற்பிகளதிவித யுக்திளமைவுரு ஜாடைமேற் எங்கும்
சித்திரவிசித்திர மச்சுகளெங்கினுஞ்சிறதாம்
நிர்த்தன ருற்றிடு சிற்சபை நற்புகழ்வாருதாம்

பாதிரிமுல்லை யசோகுவிரிந்திடு தாழையாம் அதிற்
பலபலநிறமண மல்லிவலாரி மந்தாரையாம் திகழும்
வெண்ரோஜா செவ்வலரி ஜெண்பகம் வனம்
எங்கினு மலர்ந்துமே விளங்கிடும்

ஆடிடுமாமயில் கோகிலஓதிம சாயலும் திவ்ய
பேடொடுகூவிமேல் தாவியணைந்திடபாயலும் சிறு
கிச்சிலிக்காடை கௌதாரி கேகயம் எங்கும்
உச்சிதப் பச்சை மைனக்கள் சோபிதம்

கருமணர்பறவிய நிறைவுருஜலமுள ஆரதாம் அதிற்
நிலைகொளாமடுவினிற் மகரமீனெடுபெருவாளையாம் தத்தும்
சங்கினெடுமண்டூகங்கள் சப்தத்தாற் தங்கும்
கெண்டைகரா கூர்மம்நண்டு உளருமாம்

விண்ணுலகைத்தாவும் மெத்தைவீடதாம் அந்த
பொன்னுலகுங்காணசற்று வாடுமாம் அதிற்
பொற்கொடிகள் உத்தமர்தம் மக்களொடு எப்பொழுதும்
புகழும் எங்குந்திகழும்

மன்னுதிமன்னர்போற்றும் பாண்டியன் தங்கி
வாழ்ந்திடு மரண்மனையை காண்பவர் இந்த
மண்டலத்திலிதைப்போல கண்டதில்லை என்றுபலர்
கூறுவார் துதித்தாடுவார்

சந்ததங்கல்யப்பெருமாள் போற்றுஞ் சோம
சுந்தரன்சரிதையதையார்க்கும் பண்டு
தந்ததிருவிண்ணமுது என்றுபுவி எங்கும்புகழ்ந்
தேற்றும் இஃதாற்போற்றும்

---

# முதற்பாகம்.

## ஹரிமர்த்தன பாண்டியன் தர்பார்.

(பியாரே தேக்கோ) என்ற வர்னமெட்டு.

நாகரீகன் ராஜ்யவைபோகன் நஞ்சுண்டவரன்பினனுகும்
ஸுந்தரன்றன் வம்சவனுகும் (நாக)

இங்கிர்தகவிபாட மங்கையர்கிர்த்தனமாட
அந்தணரெங்குங்கூட சங்கீதர்இசைபாட(நாக)

மந்த்ரிபிரதானியர்சூழ எங்கினுங்கட்டியம்போட
மண்டலத்தோர்கொண்டாட மிண்டர்களிடுக்கனேட(நாக)

சுந்த்ரஹரிமர்த்தனனே தங்கிடும்மதுரைக்குக்கோனே
சந்ததங்கல்யப்பெருமா ளின்பதமுறைப்பன்நானே(நாக)

## தேசவிசாரணையிற் தர்பார்.

(மாதுபாகமானவா) என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகுதாளம்-ஏகம்.

வருங்கால முறைப்பவா மந்திரியருகில்வா
வானவர் துதிசெயும் மாமதுரை நகரில்
மாதவர்தினம் வேதங்களோதுகிருர்களா
கோவிலெலாம் நாட்கடோறும்
ஆறுமுறை பூஜைவரை
நடந்தேருகிறதோ அறமூருகிறதோ
நானறிய நீறுரைய(வரு)

மாதமும்மாரியுண்டா மதிமந்திரிசுகமுண்டா
நேயக்குடிகளெல்லாம் க்ஷேமந்தானுஎன்மந்த்ரி
நேரில்அரிகுவீரோ பாரில்நன்மைசெய்வீரோ
சிற்றரசர் ரடைவுடன்
கப்பணம் தவரிடாமற்
வருடந்தோறும் தருவிதமுறைய
வருவாய் முறையாய்(வரு)

## அமைச்சர்கள் பதிற்மொழிதல்.

(ஆவாலோ பாவால ஜாவே) என்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

தேவாதமது தயவாலே எந்த
தேயத்தும்நமதரசுமேலே என
சம்ப்ரமமாகவே மண்டலமீதே
சுந்திரனுன்பெய ரெங்கினுங்கொண்டாட
திங்கள் குலத்துதித்த வென்(தேவா)

நாகரீக மஹராஜன் திவ்ய
ராஜபேட்டியார் வெகுநேசன் இந்த
நாட்டின்குறையதை நசித்துமே ஓட்டி
நன்மைத்தங்கிடுந்தங்க ளன்பின்றயவாலே(தேவா)

அமைச்சர்கள் வசனம்:—தேசமெங்கும் புகழும் ராஜகெம்பீரா ! நமஸ்கரிக்கின்றோம். ப்ரபு ! மனுநெறியின் வண்ணம் நடையுறும் நமதாக்ஷியின்கண்ணுள்ள பிரஜைகள் யாவும் வியந்து மகிழ்ந்து குதூஹலமடையும் பேரிரையல் கடற்றெனியிலும் மேலுறுகிற தென்றறிவீர்கள் கோவே.

அரசன் வசனம்:—கல்யான். ஹே ! எனதென்பினும் வுரிய அன்புள அமைச்சர்காள், அவ்வண்ணம் நடையுறும் செயல் நம் குலதெய்வீகமாகிய சோமசுந்தரன்றன் கிருபையல்லது வேறுளதோ.

அமைச்சர்கள் வசனம்:—ஆம். ஆம். அண்ணலே.

---

(பொது வசனம்.)

இவ்வண்ணம் ஹரிமர்த்தன பாண்டியன் ஆக்ஷிபுரியுங் காலத்திற் தம்கருத்தின்வண்ணம் தமது அமைச்சர்களிற் முதன்மை பெற்றவராகியும் சைவ பிராமணக்குலோத்துங்க சிவபெருமானிடம் பக்தி நியமத்திற்குறையாத பக்தசிகாமணியாகிய மாணிக்கவாசக சுவாமிகளென்றும், வாதவூரடிகள் என்னும் நாமந்தரித்துள்ள அடியவர் தமதரசனுக்கு அநேக அஸ்வம்வாங்கி வருவதாக



15-வது படம். மதுராபுரி தேவஸ்தானம்—சோமசுந்தரக்கடவுள் நரிகளை பரிகளாக்கி பாண்டியனிடம் ஒப்புவித்தல்.

திரவியங்களைப் பெற்றுப் போய் திருப்பெருந்துறை என்னும் க்ஷேத்திரத்தின்கண் எங்கும் ஸர்வவியாபகராகியும், ஸர்வாந்த்ரி யுமான எம்பிரானின் திருவருட்கடலிற் மூழ்கி அன்னவர் அவாவி னூர் தாம் பெற்றுப் போன திரவியங்களெல்லாவற்றையும் தாம றியாது உலகமாய வசக்தத்தைமறந்து அவ்வாலயத்திற் ஓர் ஆலய திருப்பணி செய்து மற்றும் அடியார்களுக்கு உபசரிப்பதில் சிரத்தையுடையவராக தம்மிடமுள்ள திரவியம் அனைத்தையும் சில வழித்து பிறகு பாண்டியன் கண்டனமொழியால் மெத்த வருந்தி பிறகு ஈஸ்வர சக்தியின் உதவியார் காட்டினிடத்திற் வசிக்கும் அநேக நரிகளெல்லாவற்றையும் உம்பர் உலகவாசியாக அமைத்து ஈஸ்வரனே பரிமேலழகர் என்னும் நாமமுடையவராய் வாதவூரடி களை அழைத்துக்கொண்டு அநேக அஸ்வங்களையுங்கொண்டுபோய் அரசனிடமொப்புவிக்க, அன்னவர் மகிழ்ந்திருந்து பின் சிந்நாளிற் ஓர்தினம் அக்குதிரைகள்யாவும் நரிகளாய் மாற சிவபெருமான் செய்து விடவே குதிரைப்பாகர்கள் அச்செய்திகள் அரசனுக்கறி விக்க பிராப்தமாகுகிறார்கள்.

---

# இரண்டாம்பாகம்.

(சும்சும் பியாரி) என்ற மெட்டு.

இராகம் - பார்வி - தாளம் - ஆதி.

எங்கெங்கும்புகழ் சந்த்ரகுலபாண்டியர்க்கு
இரதம்விடு குதிரைநற்பாகர்களே
இளைத்திடுபரியை நடத்திட நிமிஷமிற்
எண்காதமேமோட்டிடுந் தீரர்களே
எதிரிகள் சமரினிற்
குதிரைகள் சிரமதிற்
எங்கள் பரி மிதித்திட விதமறிவோம் (எங்)

---

## பாகர்கள் அரசனிடம் முறையிடுதற்.

(சோமசேகர னருளும்பாலா என்ற மெட்டு.)

வீரதீர சூரமகி பாலாலோலா வாழு
மாமதுரை வாசனெனுங் கோலா கலா

சந்திரக் குலத்துதித்த மன்னன் என்னென்றவர்
தந்திடுங் கொடை தனிபேர் கர்னன் கர்னன்

தேசொளி வீசிடு மாபதியே குறை கேளும் ஆளும் நம்
தேர்விடு பரிகளதோ கதியானதிவ் வாறும் கோறும்

வாதவூரார் செய்ததிந்த சூதோ வாதோ அவர்
வாங்கியக் குதிரைகளிப் போதே ஏதோ

ஒன்றுடனே ஒன்றெதிர்த்துக் கொன்று தின்று காட்டில்
ஓடிவிட்டது நரியாய்சென்று இன்று

---

## ஹரிமர்த்தன பாண்டியன் வாதவூரடிகளின்பேரிற் சினங்கொண்டு மற்றைய அமைச்சர்க ளிடம் பரியாலோசித்தல்.

(பெண்களின் ஆசைபொல்லாது) என்ற மெட்டு.

பல்லவி.

பாதக வாதவூரானே செய்தபேதகமாமீது தீது—அவன்
ஏதுசெய்திட்டானோ ஒது மிப்போது

அநுபல்லவி.

காதகனவன்மெத்தகபடம் அவனுதித்த
வேதியகுலங்கற்ற விதத்தைப்பார்த்திடும் பித்த (பா)

நேயமந்திரியென்று இந்நாள் பாவி
நினைத்திடநடித்திட்டிவ் வகைமோசம்செய்ய (பா)

சாதகமாகவே தனத்தினை யொளித்திட்டு
மாயக்குதிரைகள்தன்னை வாங்கிவந்திட்டான்பாரும் (பா)

காட்டின்நரிகளெல்லாம் கூட்டிவந்தெந்தன்னிடம்—விண்
நாட்டின்புரவியைப்போற் காட்டிமறைத்த திந்த (பா)

---

## மற்றுமுள்ள அமைச்சர்கள் பதில்கூறுதல்.

விருத்தம்.

என்னவென்றுரைப்போம்நாங்க ளிறைவனுன்சமுகந்தன்னில்
மன்னவனுமதன்னத்தை வஞ்சன்புசித்திருந்தும்
அன்னவன்செய்ததிந்த அநீதத்திற்கெதிர்மாருக
சின்னபின்னங்களாக சிதைத்திடசெய்வீர்கோவே.

---

## வாதவூரடிகளை அரசன் சமுகத்திற்வர ஆக்ஞாபித்தலும் அன்னவர் அரசனிடப்சென்று வணங்குதலும்.

(வேராயெனை விடலாகுமா என்ற வர்னமெட்டில்)

வேறு சந்தம்.

கண்ணிகள்.

புரவலனே புரவலனே பூதலத்தோர்புகழும் காவலனே
புத்திமயங்கி கலங்கிவாட
பிழைகளென்ன நேர்ந்ததையா (புர)

அரசன் தரு.

வார்த்தையினுலே மகிழ்வுற்றிடவந்தாயே
வார்த்தையாடாதே போ—போ—சீ—சீ
வார்த்தையாடாதே போ—போ

வாதவூரடிகள் வசனம்:—ஆ! இஃதேது எக்காலத்தும் கேட்டறியாவிதமாக அரசன் கோபிக்கும்வண்ணம் நான் என்ன தவருதலாக நடந்துகொண்டேனே ஆ! ஆ! ஒன்றும் தோன்றவில்லையே. (இவ்விடம் யோசிக்கிருர்.)

தரு.

வாதவூர—ஏழைமேலித்த ஊைகோபமா
அரசன்— எனக்குதுரோகஞ் செய்யலாகுமா
வாதவூர—ஒன்றுமறியேனே கோவே
அரசன்— உற்றுனினையடா துரோகி
வாதவூர—துரோகமேதுஞ் செய்திலையே

அரசன்— செய்திலையென்றுயே முன்னமே அஸ்வங்கள் என்ன
விதம்வாங்கினுய் நீவஞ்சகனே

வாதவூர—வாங்கிய அஸ்வத்திற் வழுவுருமாராக வஞ்சகம் யாது
மிலை ஆ! ஆ!
புரவலனே புரவலனே பூதலத்தோர்புகழுங் காவ
லனே

அரசன் வசனம் :—அமைச்சர்காள் ! இங்ஙஞ்சினுங்கொடிய வஞ்சகனுகிய இப்பாதகனை நம் மதுரைமாநகரில் விளங்கும் வைகைநதியின் இடையிற் சுடுமணலிற்நிறுத்தி அண்ணாந்தாள் பூட்டி குறடா கொண்டடித்து பலவித ஹிம்சைக்குள்ளாக செய்து நம் திரவியத்தை கொட்டும்படிசெய்ய அதிசீக்கிரம் நமது கொலையாளர்களை வரவழைப்பீர்களப்பா மந்திரிகாள்.

---

## கொலையாளர்கள் பிராப்தமாகிருர்கள்.

(தந்தானமடி தந்தானமடி என்ற வர்னமெட்டு.)

உஜார்உஜார் உஜார்உஜார் உஜார்மிஸ்டரே
பஜார்பாண்டியன் ஹாலில்வந்தோம் சபாஷ் துஷ்டரே—ஓய்
நாமிருப்பதுநாமிருப்பது நாமிருப்பது திருமதுரைநாடிதல்லவோ
பலீன்—நாடிதல்லவோ ஷோக்நாடிதல்லவோ அப்பாடா நாடிதல்
[லவோ

எங்கள்—பேரிருப்பதை சொல்லிடவெட்கம் புகழைசொல்லவோ
நிஜாரணிந்த எங்களைக்கண்டு நீங்கள்மிரளாதீர்
ரஜாவாங்கி ஒய்வைக்காண வீவிற்போயிருந்தோம்
ஜிலுஜிலுத்திட எலக்ட்ரிலயிட்டின் ஜோதிபாருமே
அப்பப்பா ஜோதிப்பாருமே அந்தோஸார் சோதிபாருமே
ஆஆ! அதினடுவினி டாலடித்திடும் அரணைச்சேருமே
நார்வேஸ்வீடன்டர்க்கிசைனு நார்த்தமேரிக்கா
ஜோலார்லண்டன்ருஷியாஜப்பான் ட்ரான்ஸ்பர்ஆப்ரிக்கா
எங்குந்தங்கிட இஷ்டமிராமற் இம்மதுரைகண்டு
வந்தோம் டி-ஜி-கலியப்பெருமாள் வந்தனமொழிகொண்டு

---



19-வது பு-ம். ஹரிமர்த்தன பாண்டியன் தர்பார்—கொலைஞர் மாணிக்கவாசக சுவாமிகளை அரசன்முன் கொணர்தல், அரசன் தண்டனை விதித்தல்.

ஷ வர்னமெட்டில் ஒருபேதம்.

இ-ம்-கேதாரம்-தாளம்-ஆதி.

மாவிருக்குது மாவிருக்குது மாவிருக்குது மதுரைஅரணிலே
ஹாவிருக்கிற ஷோக்கைபாரும் ஆஹாவெகுபேஷே

பிகில்அடித்திடும் முழக்கம்பாரும் பொற்ருமரையிலே
மலர்விரிந்திடும்ஜோரைப்பார்த்து மகிழுந்தரையிலே

பார்த்திருக்கையில்கருடன்போல பரிக்கும்பேர்தனே
பள்த்தாதீர்க்க டோட்டாபோடும் பலேமேன்யெம்மை

பட்டாளத்தினிற்கமாண்ட்ரன்சிப் தொழில்பார்க்க சொன்னர்க [ள்
கட்டாதெனபாண்டியனுக்ஷியிற் காவற்பூண்டோமே

குண்டுமுனையிற்புகுந்துயேறி குதித்துயெழும்புவோம்
பெண்டுகட்குறையை கேட்டுவிடிலோ பின்னேபதுங்குவோம்.

கொலையாளர் வசனம் :—மஹாராஜ் நமஸ்கரிக்கின்றனம்.

பாண்டியன் வசனம் :—ஸபாஷ் வாரும் மல்லர்காள்.

கொலையாளர் வசனம் :—அண்ணலே எங்களை இவ்விடம் வரவழைத்த உத்திரவை அறிவிக்கவேண்டும் ப்ரபு.

அரசன் விருத்தம்.

மறலியும்நடுங்கவாய்ந்த மல்லரேநமதுசொந்தத்
திரவியமபகரித்தத் தீயனுமிவனைக்கட்டிப்
பரதவித்திடக்கொதிக்கும் பறுமணற்வைகையாற்றிற்
கரமதைபிணிந்துதள்ளிக் கணத்தினிற்பொன்னைவாங்கும்.

---

## மல்லர்கள் திருவாதவூரடிகளை நெட்டிதள்ளி கயிற்றினுற் பிணிந்து இழுத்துக்கொண்டுசெல்ல அந்நவர் சோமசுந்திரக்கடவுளை நோக்கி இறங்குதல்.

(என்தாய் கோசலை அம்மா என்ற வர்னமெட்டு,)

நான்மாடக்கூடற்நாயகா — நானென்னசெய்வேனிதற்கு
ஏனிவரிவ்வாரிழுக்க — எழுதிவிட்டாயெனக்கு (நா)

பாவிநானிவ்வாறுபட — பரமனுன்சம்மதந்தானே
ஆவிதத்தளிக்குதே — ஐயோயிவ்விதந்தானே (நா)

பரிபோற்றீ அன்றளித்து நரிபோலழியஒன்றுங்
குறியோனிவ்வாறுபட முறையோசுந்தரமின்றும் (நா)

---

(எங்கேதான் போனுயோ ஓசிவமே என்ற வர்னமெட்டு.)

இ-ம்-தன்னியாசி-தாளம் ரூபகம்.

பல்லவி.

சந்த்ர சடாதரனே ஓசிவனே
சண்டாளனுனே பரனே

அநுபல்லவி.

பந்தபாசத்துடரால் இந்தஜென்மாவெடுத்து
அந்தகனுக்காளாவது உந்தனுக்கழகோசொல்லிது(ஸந்)

அக்கறுகுகொன்றைதும்பை அம்புலியுஞ்சூடுந்திரு
சொக்கேசாயான்படுவது சுகுர்தமிதோபுகலீசா(ஸந்)

மக்களொடுபெண்டீர் மனைபொருட்கள்சுற்றமிதை
எக்காலமுஞ்சதமெனவே எண்ணியுழல்கின்றேனே(ஸந்)

வானவர்களனுதினமும் வணங்கித்துதிப்பவனே
கானக்கலியப்பெருமாள் கண்ணுக்கிருமணியானவனே(ஸந்)

---

(வாலவய தாகியழ காகி என்ற வர்னமெட்டு.)

மாலைகிளி வாகனமீ தாகவரு மோகனெறி மாமலரி ஞனுருகி
ஓடிமன மூடிதிகழ் மாதுவவ ளோடனது நாதனிட மேகஇவ
னவளோடு

மாமயலி லேமுழுக காதலனி நாதமது வேகமொடு ஓடிகடு
வாககரு வாயிற்விழ பாலனுரு வாகிஉயி ராகிதிரி நாறுதின
மதிலூரி

தாயமுது சோகமுட ஞேகஅறை யாகசிசு தானமுவி பூவிற்விழ
கூவிமடி தாவிதிரு சேயனழ கோடுசில நாளதனி லேபருவ
வயதாகி

தேகமொளி யாகிமயிர் கோதிஒயி லாகிநடை சாயலுற வேகிசிறு
மாதர்களி னேடுதினம் சேறமன தாகிநகை மீறிஅவ ளோடுசுக
மதிற்மூழ்கி

வாதனைக ளோபலதி னேடுபிணி யாலுழல மாறிசில
நாளதனி லாசைவெகு வாகபல வாழ்வதனையேகருதி தேடிஅதி
உருமாறி [லேமகிழ

வாலதிசை யேகிவய தாகிகிழ மாகிகர மீதிறதடி யூணிமதி
மீறிமறு பேரைசில சீறிமொழி பேசவவர் நாயலகை பூதமென
பலவேச

ஈளையொடு சூலைசொரி நோயதனி னுலழுது எமனவனேகயிரை
வீசிஎரி போதிலுயிர் சேய்மனைவி வீடுபொரு ளானதவையேகருதி
தடுமாறி

ஏகிநர கேமுழுகு பாழுமுட லாலுதவி யாதுமிலை யேமதுரை
ஈசனிரு தாளைபெற நேயமன தாகிபத மாயுரைகு வேன்கலிய
பெருமாளே.

---

வாதவூரடிகள் வசனம் :—ஹே ஜெகதீசா! தமதன்புக்குறிய பக்தர்களிடம் உயிரோடுரிய உடல்போலவும், புஷ்பத்திற்குறிய மணத்தைபோலவும், மணிக்கிசைந்த ஒளிபோலவும், எள்ளுக்குள்ளிருக்கும் எண்ணையைப்போலவும், கலந்துருகி நிற்கும் பரமதயாள ஸோமசுந்தரம் இச்சண்டாளன் பையரவின் பகுவாயின்கண் பட்டு நையுந் தேரையைப்போற் கசிந்துருகி வாடும்படியாக இக்கொடிய கொலையாளர் கையில் ஒப்புவித்து நீர்கடக்கப்போய் நிற்பது உமது கிருபாநோக்கத்திற் கழகாமா இதுவும் உமது சம்மதமா ?

---

## வாதவூரடிகட்கும், கொலையாளர்கட்கும் தர்க்கம்.

தரு-பார்வி-தாளம்-ஆதி.

கொலையாளர்.

ஆ—யோக்கியனைப்போலே வார்த்தையுரைத்தாலோ
உனைவிடுவோமென் றெண்ணியோ சீ சீ
உனைவிடுவோமென் றெண்ணியோ போ போ
உளறுகிறுயோ நீ

வாதவூரார்.

அந்தோ — ஆதுமா இதுநீது அநீதஞ்செய்யலாகாது
அடிப்பதனு லேதுவரும் ஹா ஹா

அடிப்பதனு லேதுவரும் ஒ கோ
ஐயோ தகாது

கொலையாளர்.

திருடா எம்மரசன் திரவியமெங்கே
செல்லாது உந்தன் சம்பம் போ போ
செல்லாது உந்தன் சம்பம் சீ சீ
சீக்கிரங்கொடடா

வாதவூரார்.

திருடிட எனக்குத் தெரியாதையா முன்
சென்மத்திற் செய்ததிதுவோ ஹா ஹா
சென்மத்திற்செய்த திதுவோ
சிதையாதீ ரய்யா

கொலைஞர்—புகல்வது மெய்யா

வாதவூர—தகிக்குது வெய்யிற்

கொலைஞர்—கொடுத்திடு கையிற்

வாதவூர—பொருளென்னிட மேது

கொலைஞர்—இனியுனைவிட தகாது

வாதவூர—பொருக்காது எந்தன்தேகம்

கொலைஞர்—ஒளிக்காது சொல்வாய்நீயும்

வாதவூரடிகள் வசனம்:—ஆ விதிவசமே அப்பா கொலைஞர்களே! இப்பாவியாகிய யான் திருடியதாகவும் ஒளித்துப்பேசியதாகவும் உங்கள் மனதிற்கு தோற்றப்படுகின்றனவா.

கொலையாளர்:—ஆம் அதற்குக் கிஞ்சிற்றேனும் ஐயமுண்டா.

---

## வாதவூரடிகளை கொலையாளர்கள் கரத்தை பிணிந்து அண்ணாந்தவிட்டு வைகை நதியின் தீர இடையிலுள்ள சுடுமணலிற் நிறுத்தலும் அன்னவர் ஈஸ்வரனை நோக்கி இறங்குதலும்.

விருத்தம்.

ஆரண னயனுந்தேடி யறிந்திடா பொருளே பொல்லா
சோரனோ பாவியானிச் சூரர்கண் வசத்திற்சிக்கி
வாரணமெதிர்ப்பதேபோற்வதைத்திடுமிவர்கையிட்டெடக்
காரணமுற்றுநீறுங் கடக்கப்போய் நிற்பதேதோ.

ஷை விருத்தம்.

மலமெனுமாசாபாச வலையினி லகப்பட்டோர்கண்
நலமெனும் பெரியோருள்ள நன்மையையறியப்போமோ
உலையின்வாய் மெழுகைபோல் யானுருகிறேனையோமண்ணின்
சிலையெனவிருக்கப்போமோ சிவசிவா கண்பாரய்யா.

ஷை விருத்தம்.

கற்பூரசுந்தரேசா கடவுளேமதுரைவாசா
நற்குணசுந்தரர்க்கு நண்பனேவன்பர்நேசா
அற்பராமிவரிடுக்கண் ணகப்படவிதியோ ஈசா
தற்பராவுனக்குநெஞ்சம் சகித்ததோ அருள்விஸ்வேசா.

---

(தொரசச்சநஹி என்ற வர்னமெட்டு.)

இ-ம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-சாப்பு.

பல்லவி.

வேண்டினேனே கூடலிலெழுந்த வேதநாதனுன்
மேன்மைத்தங்கிடும்பதத்தை வீணனடைந்திடும்விதத்தை

அநுபல்லவி.

மானிடமயத்திற்வாழ்நாட் கழிக்கலாமோ
மண்தின்னுங்காயமிதை வளர்த்துச்சுகிக்கப்போமோ
வானமுதே என்செய்வேன் மறலிக்காளாகுவேனோ
தேன்போன்ற உன்பதத்தைச் சேர்ந்துவுமக்காளாவேனோ(வே)

சோற்றுத்துருத்தியினை நேர்த்தியுடன்வளர்த்து
காற்றுத்துறந்துவிடிற் நேற்றைக்கிருந்தவெங்கே
நாற்றமெழுந்தசைநரம்பை நேர்த்தியுடன்வளர்த்து
நீற்றுவிடுந்தீபசியை யாற்றுவதிற்பய்னென்ன(வே)

பெண்டுபிள்ளைகள் தனையே கண்டுமகிழ்ந்தென்னபயன்
தண்டுடனேநமன்நாளை சண்டையிடவருவானே
அண்டையிருப்போரிவர்கண் கொண்டிடாமற்செய்குவரோ
ச்ந்தையினிற்கண்டவரை சொந்தமென எண்ணிடாமற்(வே)

ஞானந்தனிலுதிக்கின்ற மோனந்தனைகண்டோரெண்
சாணுடலைநம்புவரோ மானந்தனைநண்ணுவரோ
வேலவன்திருதாதையாகிடு மீசனைமுனை பாவதாற்சொல
பாலனுங்கல்பபெருமாளினெழிற்பதம்நேயமாய்பாடிநீர்மகிழ்ந்திட
(வேண்டினே)

---

## வாதவூரடிகள் தாம் சற்று இவ்விடம் யோசிக்கிறார் பின் தமது பூர்வக்ஞான தீபமெழுந்து அஞ்ஞானவிருளை நீக்கி தமது மனதிற்கு திட சித்தத்தைவற்புருத்தி தமக்குள் யோசிக்கிறார்.

ஹோ! அகப்பேயே ஆ என்ன உனது தன்மையைக் குறித்தாற் எனக்கே ஆச்சர்யமாய் தோற்றுகிறதே ஆ உனக்கிவ்வளவு எழ்மையாக ஏற்பட்டது எனுனக் கிவ்வளவு! சற்று உனது துர் அகங்காரத்தை நிறுத்து யான்சொல்வதைக்கேள் ஆன்றோர்களாற் எடுத்துக்கூரிய வண்ணம் வேதங்களாலும் தேவர்களாலும் அறிய வெட்டா வஸ்த்துக்களென்னும் ப்ரம்ம, விஷ்ணு, ருத்ரன், என்னு முப்பொருளிற் ப்ரம்ம தேவரென்பவர், தாம், குகனருளிய பிரணவத்தின் பொருளிற்கு விடையளிக்க முடியாமற் அநேகநாட் சிறையிற் வருந்தவில்லையா ஸர்வ வியாபக சிவனுற் தமது சிர மைந்திற் ஒன்றை தரித்துவிடும் லபிதத்தையடையவில்லையா இரண்டாவது லக்ஷ்மிக்கு வத்ஸனுகியும் அநேக இராக்ஷஸர்களை தும்ஸ படுத்தினவராயும் ஸர்பஸயனத்திற் அமைபவராகியும் விராட்ஸ்ரூபராகியும் விளங்கும் விஷ்ணுவானவர் ராமாவதாரத்திற் தம் சிற்றன்னை

யாகிய ஓர்மாதின்வாக்கின்வண்ணம் தாம் பரதேசியாக தம்மனைவியுடன் காட்டிலுள்ள கல், முள், செடி, கொடி, மலை, இவற்றிற் அநேக துன்புற்றடைந்து பின் தமது மனையாட்டியை ஓர் இராக்ஷஸன் கைப்பற்ற மனம்வருந்தி பின் தாம் அன்னவனோடு வெகுவிதமாக கஷ்டப்பட்டு போர்செய்து தமது இல்லத்தாளினரை அடையவில்லையா? ஸர்வ ஸக்திமானாகிய ஈஸ்வரன் ப்ரம்மாவினால் ப்ரமகத்தி தோடஞ்சேற சுடுகாட்டிற் புரண்டும் என்புகளை தரித்தும், தலையோட்டை கையிலேந்தியும், பிக்ஷையெடுத்தும், ஆலவிஷத்தை யுண்டும், இத்தியாதி கஷ்டங்களெல்லாம் அவரவர் லலாடலபிதப்படி துன்புறவில்லையா? நாயினுங்கடையாகிய நீ இத்துன்பத்தை சகிக்க, இப்பாடுபடுவதை நோக்குங்கால் நானுனக்கு என்சொல்வேன் ஏ மனமே!

---

வாதவூரடிகள் இவ்வண்ணம் தம் மனத்தைத்தேற்றி தாம் சிவத்தியானமென்னும் சிந்தையில் தனது தேக சூக்ஷமத்தை துறந்தவர்போர் யோகபாவனையாக ஆழ்ந்திருக்க, ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் அந்நவர் பக்திக்குவியந்து ஹரிமர்த்தனபாண்டியனின்மேற் முனிந்து கெங்கையை யழைத்து வைகையிற் சென்று மதுரைமாநகரை அதோகதியாக செய்யும்படிசொல்ல, அந்நவள் பிரளயகால வெள்ளம்போற் பெருகிவருதல்.

# மூன்றாம்பாகம்.

# ஸ்ரீசோமசுந்தரக்கடவுள்

## பிட்டுக்கு மண்சுமத்தல்.

### வைகையாறு பெருகிவருதற்.

(திருவுற்றிலகு கங்கை வரையிற் என்ற)

காவடிச்சிந்து வர்னமெட்டு.

அடியர்கடியரான இரைவன்றனைவாதவூ
ரடிகட்கினைந்துசிந்தை யாழ்ந்திட தில்லை
பதியிற்கெழுந்துதொண்டர் கூடிட சொக்கர்
ஆத்திமாலையினை சூட்டிருந்தமுடி
தூற்றுமண்சுமையை ஏற்றிருந்திடவே
அடிமைபோலவே அய்யன்ஏகிட வந்தி
கயிலைக்கிடமதனை தேடிட

கடையுற்றயுகமதி லுலகந்தனையழிக்க
கடவுட்புனலதனை ஏவிட அது
கொதிவுற்றெழுந்ததுபோற் றாவிட அய்யன்
காலருத்திரனை போற்பகீரதியை
வேகமுற்றுவைகை போய்கிறப்புமென
கணத்திலெழுந்துவைகை நாடினுள் கூடற்
நகர்க்கு இடையூரதைதேடினுள்

சினத்துமலையதனை யுடைத்துகாடதையெல்லாம்
சிதைத்து அலையதனுற்வாரிடும் மர
மொடித்துகரைகட் டன்னைமோதிடும் வைகை
கரையுடைந்துபுனர் நிறைவிகமுருகுகள்
குலைதெரித்துமணற் சுழலிற்நெற்பயிர்கள்
கதிரோடுருகுலையவீசிடும் வெள்ளத்
ததிரோநகரோர்செவிக் கூசிடும்

துதித்தவாதவூரன்பர்க் கிடுக்கண்செய்திட்டபேரை
நசிப்பேனெனகனைத்த தாமென அலை
இரைச்சற்பெருகி எங்கும் ஒவென மன்னன்
கோட்டைமாமதிலை நோக்கிமோதிவிழ
தாக்கிவீடுகளை தூக்கிமேலுமெழ
தவித்துமதுரைஜனயோடுவார் பதை
பதைத்துசிறுவர்தம்மை தேடுவார்

அருமைக்கணவரெங்கே மதலைகுழந்தைஎங்கென்
றடித்துத்தறையதனிற் வீழ்குவார் பதை
பதைத்துபொருளதனை வாருவார் பலர்
ஆடுமாடுக ளோடுஓடிட
மாடிவீடுக ளோடமாய்விழ
அலைந்துமனங்கலங்கிவாடுவார் நிலை
குலைந்துமேடதிலேற ஓடுவார்
அடியார்படுமிடுக்கண் சகியாபரமனவர்

அழுதகண்ணீரிதன ஓடுமாம் கோட்டை
கதவைபிளக்கவதிற் ஜாடுமாம் இவ்
வாலவாய்முழுக காலமோவெனசொல்
மேவிபாண்டியனின் காதிற்போயிறைய
அரசன்மனங்கலங்கிவாடிட தாசன்
கலியப்பெருமாள்பதம் பாடிட

---

## பாண்டியன் வெள்ளப்பெருக்காற் மதுரைமாநகர் படும் அலங்கோலத்தைக்கண்டு அமைச்சர்களிடம் வருந்துதற்.

இ-ம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதுகாரணம் வைகை
எக்காலமுமில்லாத இக்கோலமுமுண்டாக (ஏது)

அநுபல்லவி.

தாவியேபெருவெள்ளம்வந்த தாலே
தத்தளித்துஊரிச் சாலே
தரிப்பதருமையேமென் மேலே (ஏது)

சரணங்கள்.

பொங்கிஜலமது எங்குமிறையுதே
போதாதகாலமிதோ பிரஜைகளுங்கறையுதே
தங்கிருந்திடுமரண்மீதிற் தாவிநிறையுதே
சஞ்சலம்படஇந்தநகர்கெட
கெங்கைபெருகிடநீடிஓடிட (ஏது)

ஊழிக்காலமென்ப திதுதானே
உமையவளின்பாகனவர்செய்த சதிதானே
வாழுமரசிற்வழுவுகட் செய்தேனே
மன்னனென துகுறை இன்னதெனவுமுறை
நன்னகர்கெடஎன்ன வென்னஇது (ஏது)

---

அரசன் வசனம்:— ஹே! அமைச்சர்காள்? ஆ! இவ்விதிக்கு யானென்செய்வேன். அந்தோ? எனது மூதாதைகட் இம் மதுராபுரியை ராஜ்யபாரம் பூண்டு ஆக்ஷி புரிந்த அந்நாட் முதற் இந்நாள்வரை இந்நகரோர்கட்கு ஓர்வித விபத்தென் பது ஏற்பட்டதை யான் கண்ணுற்றவனுமன்று. செவியிற் பட்டதுமல்லவே. ஆ விதிவசமே! ஏ ஜெகதீசா நானிவ் விப ரீதத்திற் கென்செய்வேன் பாவியாகிய யான் இவ் ராஜரீகத் தைப்பெற்று காவற்பூண் டொழுகுங்காலையிற் இவ்விதம் ஏற் பட எனதகத்திற் இடைவிடாமற் குடிகொண்டுள்ள ஸோம சுந்தரம் தமது வழிபாட்டிற்கேதுகுறைசெய்தேனே, யான் புரிந்த ஆக்ஷி அநீதந்தானோ? ஈசா இப்பாபத்திற் கென்செய் வேன். கொற்றவனனீதம் குவலயத்திற் விபரீதம். என' கொடும்பெயரை வாய்ந்தேனே? ஆ ஆ! அப்பா மந்திரிகாள் இதற்கென்செயலாம் புகல்வீரப்பா.

---

## மந்திரிகள் பதிலுரைத்தற்.

(மேரிஜான் ஸோவயா பியாராத் என்ற வர்னமெட்டு.)

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரசனீரே நொந்திட்டாற்
அவனியோ ரேதுசெய்வார்

அநுபல்லவி.

வரும்வினைபயனைநாம் மறைத்திடலாகுமோ
திருவாலவாய்பதியான் செய்ததிந்தகூத்திற்கு (அர)

சரணம்.

பெருகியவெள்ளமது நகரினிடைபுகுந்து
தெருவுகடோறுஞ்ஜலம் பிரவாகமானதைகண்டு
விரைவினிற்நகரோறை வீடொன்றிற்கொவ்வொருவர்
முறையுடன்சென்றுவைகை கரையடைக்கச்சொல்லாமற் (அர)

---

அரசன் வசனம்:—ஆம் ஆம் எல்லாம் தெய்வச்செயல் ஆயினும் தெய்வத்தாலாவதெனினும் "மெய்வருந்தக் கூலிதரும்" என மஹான்களாற் எடுத்துக்கூறியபடி நம்மாலியன்றவரை ஓர் உபாயம் செய்யவேண்டும். அஃதாவது.— இந்நகரிலுள்ள ஒவ்வோர் வீட்டிற்கு ஒவ்வொருவர் பாலர், பெண்பாலர், விருத்தர், ஆடவர், யாவராயிருந்திட்டாலும் நமது ஆக்ஞா பந்தத்திற் குட்பட்டு வெள்ளப்பெருக்குற் றோடிவரும் வைகை கரையிற் அவரவர்கட்கு கோல்முறையிட்டு வீதப்படி அடைப்படைக்கும்படியாகவும், அவ்வண்ணம் வரதவக்கப் பட்டவர்களே சித்ரவதை செய்யப்படுமென்பதை நமது நகரம் முழுதும் தெண்டோரா போட்டு அறிவிப்பீர்களப்பா மந்த்ரிகளே.

---

## மந்திரிகள் நகரத்தோர்கட்கு ஆக்யாபித்தல்.

(மோகம்பொல்லாது என்ற வர்னமெட்டு.)

பல்லவி.

வாரும் எல்லோரும் மண்வெட்டித்தட்டுடனே (வா)

அநுபல்லவி.

சீறும்ஜலமிதுவோ ஊரையழித்திடநேறும்
பாறும்மதுரை அனைவோரும்
உடைப்பதனை சேறுங்கரையொதுங்க (வா)

மாதரோடாடவர்கள் யாராயிருந்திடினும்
வீடொன்றிற்கொவ்வொருவர்
ஒடுங்கரையடைக்க நாடுமாயுதமெடுத்து (வா)

தங்கியிருப்போர்தம்மைப் பங்கப்படுத்திடுவோம்
நொங்கும்நுரையுடனேபொங்கி
வரும்புனலைஇங்கு வராவிதம்செய்ய (வா)

---

இவ்வண்ணம் அரசன் உத்திரவின்வண்ணம் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொருவர் அவரவர் வீதாசாரப்படி செல்லும்போது அந்நகரிற் ஏழைக்குடும்பத்திற் பிறந்தவளாகியும், தனது நாயகன் புத்திரன், பந்துக்கள் யாவரையும் அற்றவளாகியும், ஈஸ்வரன்விஷயத்திற் இடைவிடாபக்தி நியமம்பூண்டவளாயும், பிட்டை சுட்டு விற்று ஜீவனோபாயம் செய்துக்கொண்டு வரும் விருத்தாப்பிய அம்மையார் வீட்டிற்கும், அரசனின் உத்திரவு முறைபடிவர தாம் அத்தொழிலை நிறைவேற்றும் மனுஷ்யாளிராமற்,

## அவ்வம்மையார் வருந்துதற்

(மேரிஜான் சாவல்பியாருரே என்ற வர்னமெட்டு.)

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோ மதுரேசா ஆக்கினைக்காளானேனே (ஐ)

அநுபல்லவி.

வையகந்தன்னிலே மாபாவியாயிருந்தும் (ஐ)

சரணங்கள்.

பார்த்திபனதிகாரத்தை பழுதிலாச்செயும்விதத்தை
பூர்த்தியாய்முடிப்பேனென சீக்கிரமெனக்கார்வருவார் (ஐ)

பசிப்பிணியார்வந்தோரை முகத்தினர்கடிந்தேனே
உசிதமாயிவ்வேளையிற் உதவிடவோர்சுதனில்லையே (ஐ)
கொலைகளவுபுரிந்தேனே கோவதைவதைத்திட்டேனே
தலைவிதியினாலேமன்னன் தண்டனைக்குள்ளாகினேனே (ஐ)

---

காவலாளர் வசனம்:—டேய் யார்! கிளவி என்ன, இப்பொழுது தான் வேலையற்றுப்போய்.

ஷெ தரு.

ஐயையோ நொய்போச்சே ஆக்கவேறு இல்லையோ
கையெல்லாம்சிவக்கநெல்லை கஷ்டப்பட்டுகுத்தினேனே (ஐ)

காவலாளர் வசனம்:— என்கிறுயே—என்ன. எங்கள் இம் தெரியுமா உஜார் உஜார். தா, தா, இஞ்சே பார்த்துக்கோ தெரிஞ்சிகிறயா நாங்கள் தோல்வேறு கொட்டைவேறு செய்து சதையை உள்ளுக்குச் செலுத்திவிடும் ஆசாமிகள். மற்றுமுள்ள அவரவர்களின் வீட்டிற்குமுள்ள ஆசாமிகள் போய் எத்தனை நாழியாகிறது. ஜல்தி! ஜல்தி! ஆள் அனுப்பு இல்லாவிடில் நீ புரப்பட்டு மூச்சைப்பிடித்திட்டு ஒரே ஓட்டமாய் ஓடும்பிள்ளே மறுபடி வந்திட்டு ஒழிந்த இடத்திலே, உச்சி உருமத்திலே அடுப்பங்கரையிலே உள்ள மூலையிலே பழய நிதானத்தை எண்ணிக்கொண்டு ஙா, ஙு, முன்னு நீட்டி அளுத்தி நுமுக்குன்னு அளலாம்?

அடே கருப்பண்ணு இப்படித்தாண்டே? சில பொம்புளேங்களெல்லா்ம் நல்ல வேலைத்தனம் பண்ராளுங்கடா என்ன? ஒருத்தி புருசனுக்கு மற்றவளுகள் அளப்போறது. அங்ஙனே நல்ல நல்ல வேடிக்கைப் பார்க்கலாம்ண்டே. இந்த மைனர்? லேடியஸ்கள் சிலதும் அக்கூட்டத்திற்குச் செல்றதுபார். அதுகளெல்லாம் புறப்படும்போதே தங்கள் தங்கள் ஆடைகளை வ்விட்டா இருக்கிக்கொண்டு செல்றது. அங்கனே குப்பலில்சென்று ஒருத்தித்தோளை ஒருவள் ஜாயிண்ட் பண்ணகையால் இளுத்து பீட்மண்காட்ட பிடிவரிசைப் பண்ணப்போறதுபோற் இளுக்கையில் இவளுகள் இளுப்பு தாங்கமாட்டாமற் அரைகிளம், மூக்காற்கிளம், முளுகிளம் இவைகள் ஏற்கனவே அளமூச்சைகட்டி அள வெகுபிரயாசைபடும் இவளுகள் உபத்திரவம் இன்னும் அளுகலோடு இவளுகளுக்கும்

அளரதுராகம் பாட்ரதும், பின்பேர்வளிகள் எளுந்து நாமெல்லாம் புஜவரிசை, குஸ்தி, உடான்ஸ், பீட், பிடிவரிசை இதுகள் செய்கிறதை இவர்கள் அற்பமென்று எண்ணி கழித்துவிட்டு அவர்கள் மார்வரிசை செய்யும்போது பார்த்தால் கோடை, இடி குமுருவதுபோல் இருக்குமண்டா. அண்ணே! இந்த பொம்புளேங்களெல்லாம் இதுவோர் வேடிக்கைக் கத்துருக்காளுங்கடா?

---

## வந்தி கிழவி வருந்துதல்.

(கானகத்திற் நானலேந்து என்ற வர்ன மெட்டில்).

வே று ச ந் த ம்.

கண்ணிகள்.

பாதகினென்னசெய்வேன் படுபிழைக்காளாகினேனே
வாதைப்பட்டிடவிட்டாயே மாமதுரைதேவர்கோனே

பிட்டைவிற்றுவயிர்வளர்த்த பேதையெனக்கரசனிட்ட
கட்டளையைமீறுவேனேற் வெட்டிடுவானேயரசன்

பாலர்பதியெவருமற்றுப் பாவியள்நானே தவிக்கும்
வேளையினிலாளெனவே விருத்தையெனக்காருதவி

பக்தருக்குஉற்றத்துணை பரமனெனவேபுகல்வார்
சக்தியொன்றுமில்லாளெனக் குற்றத்துணைசொக்கன்நீரே

வசனம்:—ஆ! கருணாநிதியே! ஞானத்தின்கண் தோன்றிய சகல ஜீவாத்மாக்களிலும் இழிவானஜென்மம் பெண் ஜென்மமேயாம். அவ்விதம் ஐடமெடுத்தபோதும் சிலர் முப்பிறப்பிற் மெத்தவருந்தி தேடப்பெற்றுள்ள சீறும், சிறப்பும், இவை தனது வீட்டின்வாயி னளவேயாம். தனது வாட்நாளிற் மிகுந்த ஸரச ஸல்லாபத்துடன் உடலோடுரிய மனைவியர்வீதியளவேயாம். தமக்குத் துன்பம்நேர்ந்தகாலத்து உதவிசெய்யும் நற்குலபந்துக்களும் மகன்றந்தைக்காற்றுமுதவி யிவன்றந்தை என்னோற்றன் கொல்லென்னுஞ்சொல்'என ஸ்ரீநாயனாருளிய திருமொழிப்படியுரிய தம்மக்களும் ருத்ரபூமி யளவேயாம். பிறகு இவ்வான்மாவுடன் சென்று மறுசென்மத்திற் குதவியாதற் நல்வினை தீவினையென எண்ணி விரைவிற் நற்கருமத்தைச்

செய்தோர் இந்த சென்மத்திற் உலகமாயா வசத்தத்திற் நற்சுகத்தையாவது அடைதற் இயற்கை: இச்சண்டாளியாகிய யான் பரமதயாள சோமசுந்தரம் தமது வழிபாட்டிற் யாதுகுறைசெய்தேனோ அன்று, ஐயமிட்டுண்ணுமலும், பிறர்குடியை வேறுபடுத்தியும், பொய், கொலை, களவு, இம்மூட்டைகளைச் சுமந்தும், புருடனைவைத் தயல்புருடனைத்தழுவியும், உண்டவீட்டிற் இரண்டகஞ்செய்தும், சிநேகிதருக்குத் துரோகஞ்செய்தும், சிசு, பசு, பிராமணர் பக்ஷி முதலிய மன்னுயிரை வதைத்துண்டும், பிச்சையென வந்தோரை புரவாயிலிற் காக்கவைத்தும், ருணபாதகஞ் செய்தும், அடுத்தோரைக்கெடுத்தும், மாதா, பிதா, குரு, பெரியோர், இவர்களுக்கு நிந்தனைசெய்தும், ஓர்தினம் மூப்பதுநாழிகையிற் அரைநிமிஷமாயினும் ஈஸ்வரனை சிந்திக்காமலும்,பாவியாகிய நானிருந்ததாலோ இச்சமயத்தில் கொண்கண், புத்திரன், பந்துக்கள், இவர்களையற்று, பிணந்தின்னும் பூச்சிபோற் தனித்திருக்கநேர்ந்ததே. ஆ விதிவசமே! அரசனின் வினையாளர் பற்பலவிதமாய் கண்டனஞ் செய்கிறார்களே இதற்கென்செய்வேன், ஜெகதீசா?

---

விருத்தம்.

என்றுமீரெட்டுவயதாக மார்க்கண்டனுக்குளளித்திறந்த
கன்றுமான்றனையுடையீர் கடவுளரேவுமதுபதகமலந்தன்னை
யன்றிமறுகவலையிலாளெந்தனுக்கு நொடிதனிற்நேராக்கினைக்கு
நன்றிபுரிவதற்குன்னையல்லாது வேறொருவர்ஞாலத்துண்டோ.

---

## ஸ்ரீசோமசுந்தரக் கடவுள் வந்தியின் பக்திக்கு வியந்து மிகவும் தாரிதர நிலமையான ஒட்டனைப் போற் கூலியாளென கூவிக்கொண்டு பிராப்தமாகுதற்.

(ஒட்டநாடகத் தரு வர்னமெட்டு.

கூலிக்காள் வேண்டிருக்குமோ — ஓ—ஆரய்யா
கூடல்தனிற் வாழ்பவரே
நாளிநெல்லீந்திடினும் — ஓ—ஆச்சிமாரே
நாள்முழுதும் வேலைசெய்வேன்

தாயில்லை தந்தையில்லை என்பக்கத்துணை
தாரமுண்டு சேயிரண்டு

சேயதனிற் மூற்றவனை பசித்தழுக
சந்தியிலுட்கார வைத்தேன்

சின்னசெட்டிப் பிள்ளையவன் பசித்தனியச்
சென்றான் கடம்பவனம்

பெண்டோமலை நீலியய்யா அவள்நெறுக்கி
பிடித்திட்டாள் தொண்டைபிடி

முறிவுழை இரண்டிருக்கையே விற்றுபிழைக்க
விலைகொள்வார் யாருமில்லை

தோல்ரிகலமேலிருக்கு அரைதனிலே
தொங்குங் கொடுவரித்தோல்

தலைக்கோமுழுக்கெண்ணை யகப்படாமற்
சடைபிடித்துத் தொங்குதையா

மண்டையினி லெப்பொழுதுஞ் சலம்பிடித்து
வாட்டுதையா சூட்டுசுரம்

மைத்துனனார் சிந்தினுக்கு நானய்யா
மஹாபாவி சென்றிருந்தேன்

அங்கவர்க்கோ நீரொழுக்கார் எனைக்கண்டு
அழுதிட்டார் குடாவடியார்

என்கவலை தீர்த்திடுவான் ஒருநண்பன்
இன்பமுள்ள நற்குயவன்

அங்குசெல்ல என்விதியே அய்யா அவன்
அன்னமுமிறங்கவில்லை

எங்குஞ்சுற்றி யிங்குவந்தேன் பசிப்பிணியார்
எரியுதையா என்வயிறு

---

## வந்தி ஒட்டனைக்கண்டு தமக்கு சிறிது வேலை செய்யும்படி அழைத்தல்.

(ஸ்ரீராமச்சந்திரனே என்ற வர்னமெட்டு)

ஆருமப்பாத் தெருவினிலே வாருமிப்போ எதிரினிலே
கோறுவற்றை யான்றருவேன் வா—வா—வா
கூலியீகுவேன் வேலைசெய்
கொஞ்சமிருக்கின்றது நீவேலைசெய் (ஆரு)

தாவிவரும் வைகைவெள்ளம் தவிர்த்தடைக்கவேணுமெள்ள
கோலளவிற் என்பங்கிற்கு போ—போ—போ
கூறுவாய்பதில் சீரதாய்
கூடலோர்பின்னங்குசென்று சேறுவாய்

வசனம்:—அங்ஙனே? தெருவிலே யாருபிள்ளே அப்பாவூ? இங்ஙனே போக்கிட்டுபோவலாம் வா! பிள்ளே? ஏ! நீர் எங்கிட்ருந்த்டா அய்யே பயணம்வந்தே? என்னத்துக்கு எளவான் பிள்ளே தொந்தியை தொவையல்பண்ணிட்டு திண்டிறதே, ஆ, என்னுத்துக்கடா ஐயே எளேச்சி போய் திண்டிற்றே ஊருப்பிள்ளே எனக்குச்சுண்டலங்காய் வேலை யிருக்கிறது அதை முடித்திட்டா இண்ணையபொளுதுபோக கூலிதரமாட்டேனு அப்பாவூ? ஒட்டன் அம்மே! நீ சொன்னதெல்லாம் நான்கேள்கிறேன். நான் சொல்றதெல்லாம் நீ கேள்குனும் கடைசியில் வேலை எப்படியாவது முடிஞ்சிப்போகணும் இது தானே.

வந்தி வசனம்:—ஆமப்பா? என்னகூலிகேட்குறேடே அப்பாவூ?

அம்மே, எனக்கு இஷ்டப்பட்டக் கூலி அந்த்ரலே சுடக்கூடிய பிட்டில் உதிர்ந்ததெல்லாம் எனக்குத்தந்துவிட்டால் உன் வேலை இதோ தீந்துவிட்டது.

ஷ வர்னமெட்டு.

சுட்டப்பிட்டிலுதிர்ந்ததெல்லாம் ஒட்டனுனக்கீந்திடுவேன்
கட்டழகா என்பங்கிற்குச் செல்—செல்—செல்
தீரனே தம்பிப்பேரனே
தின்பதற்கிந்தா எடுத்துத்தாரேனே (ஆரு)

## ஒட்டனாகிய சிவபெருமான் களிப்புறுதற்.

தரு வேறு டப்பா.

(வாலே வயதுகாரி என்ற வர்னமெட்டு.)

நாவைதிகட்டுதப்பா நல்லபிட்டிதே
நவீனதினுசாவிருக்கு வெண்ணெப்பிட்டிதே
வாயிற்வைக்குமுன் கரையிது வெல்லப்பிட்டிதே
வந்தியாத்தா ஈந்ததிது நல்லபிட்டிதே

போறேனுடைப்படைக்க டிகிடி டிக்கிடி டிண்டின்
பிட்டிருக்குமடிநிறம்ப டிகிடி டிக்கிடி டிண்டின்
தாரேனெல்லோரும் வாங்கோ டிகிடி டிக்கிடி டிண்டின்
சடுதிவராவிடிற்கொடுக்கேன் டிகிடி டிக்கிடி டிண்டின்

தெம்மாங்கு.

இதில்தித்திப்பு மிட்டிருக்கு தேங்காயும்போட்டிருக்கு
என்னைசுற்றிவரும்பேர்களுக்கு ஒக்கவொருபிடிகொடுப்பேன்
டேய்வாரும் ஓய்வாரும் வாய்பாரும் ஹ-ஹ-ஹா, ஹ-ஹ-ஹா

அணையை அடைத்திடுவேன் அங்கிருந்திங்கேவருவேன்
துணியதனை ஏந்திவிட்டால் தின்பதற்குரொம்போகொடுப்பா
தோதுடாநொப்பா தோதுடாநொப்பா, நொப்பா ஹஹஹஹா

தெம்மாங்கு.

கொடுத்தபிட்டைவாங்கிதின்று
கொஞ்சமோட்டையிருக்குதென்றால்
அடைத்திவாடாஎன்றிடுவாள்
அப்புரம்கொஞ்சம்போடுவேன்
ஆமாம்டா, நய்யா, ஆமாம்டா

தெம்மாங்கு.

அவள்கொடுக்கும்பிட்டையெல்லாம் அள்ளிசரிப்படுத்தி
நிளர்குளிர்ந்தமரம்பார்த்து நீட்டிக்கலாம்தூக்கத்திலே
நன்னா, நன்னா, நன்னா, நன்னா, நன்னானே



36-வது பக்கம். கிழவாணிச்சி பிட்டு விற்றல்—கூலியாளாய் வந்த பகவான் அன்னவளிட மமர்ந்து பிட்டுவாங்கி உண்ணல்.

## கணக்கர்களிடம் ஒட்டனுகிய எம்பெருமான் தன்னை குறித்துக்கொள்ள ஆஜராகுதல்.

ஆரப்பா கணக்கப்பிள்ளை அளந்துபங்கு வாணிச்சிக்கு
கூலியாளாய்வந்திருக்கேன் குறிச்சிக்கிங்கோகணக்கதிலே

கணக்கர் வசனம்:—டேய், பெயர், ஊர், தொழில், ஜாதி, இவற்றை விவரமாகச் சொல்.

மேற்படி வர்னமெட்டு.

நானிருப்பதுவிஜயார்த்தம் நாமதேயஞ்சொக்கச்செட்டி
கூன்கிழவிக்களந்துவிடடக் கோலெத்தனைஎனக்குறைப்பீர்.

---

## ஒட்டன் வைகையைக் கண்ணுறுதல்

### நொண்டிச்சிந்து.

தாவிடும்வைகையிதுவா ஓ இது
தத்தளித்துபக்கமெங்குங் கொப்பளிக்குதே
கூவிடும் அண்ணமாரே நானுமிதோ
கொட்டிவிட்டுமண்ணதையும் வெட்டியும்விட்டேன்
தட்டதனின்மேல்வாரி தலையிலேற்றி
தட்டுத்தடுமாறியிதோ கொட்டியும்விட்டேன்
கேட்டீர்போங்களண்ணே இதைநிறுத்தி
கெக்கலிக்கவாருங்கடா வெட்டுகின்றீரே
மறுபடிவந்தடைப்போம் அண்ணேயெல்லோரும்
வாருங்கடா பாடல்சொல்லியாடுங்கடா
சீறுடன்தாளம்போடுவேன் நீங்களெல்லோரும்
தித்தித்தோம்தித்தித்தோமென்று குதியுங்கடா
அப்படிகுதியாதீர் அரைந்திடுவேன்
அக்குடுகுடுகுடு இக்குடுகுடென்றுடுங்கடா
தப்பதையெடுத்தடியும் அதுகேற்றூர்போற்
தகர்தித்தோம்திகர்தித்தோம் வைத்தடிடுறேன்
சொற்படிசெய்யவேண்டும் இத்தனைநேரம்
சுட்டிருப்பாள்பிட்டதையும் இக்கணத்திலே

நிற்காமல்வாங்கிவருவேன் இங்கிருங்கடா
நீங்களெல்லாந்தின்றிடலாம் வாங்கிவாரேண்டா
தேன்மொழியுஞ்சரிதை இஃதையுகந்து
தொண்டன்கலியப்பெருமாள் சொன்னதல்லவோ

---

வந்திகிழவி தான் அன்றுசுட்டப் பிட்டுகள் யாவும்
ஈஸ்வரச்சோதனையார் யாவும் உதிர்ந்துவிடவே
அன்னவள் ஒட்டனுக்கு வாக்களித்தவண்
ணம் தாம் மறைத்திடாமற் அன்னவ
ருக்கு வைத்திருக்கும்போது ஈஸ்
வரன் தமக்கு பசிக்கிறதென
சென்ற சிறிதுநாழிகையிற்
திரும்பிவந்து உதிர்ந்த
பிட்டுக்கேட்குதல்.

(திருமால் மருமகனே என்ற வர்னமெட்டு.)

தாயே பசியாலேஉயிர் தடுமாறுதென்செய்வேன்—மெள்ள
தட்டுத்தடு மாறிமுக்காற் கட்டளைஒப் பேற்றிவிட்டேன் (தா)

வந்தி கிழவி.

அருவாகிட விலையோகரை யடையாததுன் களையோ—இந்த
அப்புஇதைத்தின்றெல்லோர்போற் ஒப்புடனேவேலைசெய்போ

ஒட்டர்.

ஒருநாழி யிற்கரைகோலி பின்னுடனே வருகிறேன்பார்—அது
உந்தனுக்கோ அக்கவலை எந்தனுக்கல்லவோ இப்போ (தா)

வந்தி கிழவி.

தருவேனுனக் கனமாயின்னஞ் சரியாய்வேலைசெய்துவா—போ
தம்பியுனை நம்பிவிட்டேன் எந்தவிதஞ் செய்தாலும்நீ (தரு)

---

### வைகையடைக்கும் பிரஜைகள் ஒட்டனாகிய சிவபெருமான் ஒவ்வோர் நேரத்திற்கும் ஒவ்வோர் விதமாக தோன்றி குதூகலம்செய்வதைக்கண்டு வியப்புறுதல்.

(மலடி வயிற்று என்ற வர்னமெட்டு)

இவன்போ லொருவரு மிருந்ததே — யில்லை
மதனே யிவனென பிறந்ததோ — கலை
சிவனே வடிவிற் நிறைந்ததோ — இதை அறியோமே

மானிட வுலகிற் பிறப்பானே — இவன்
வானுளோருலகி லிருப்பானே — கெதி
எனிவனித்தொழிற் புரிவானே — தலைவிதிதானே

மன்மதனைங்கணை மலராலே — புவி
மாதர்கடாடவரி வண்மேலே — எய்து
வன்மயல்விளைவிப்பதுபோலே — இப் புவிமேலே

ஸந்திரபிம்பமுக மலராலே — இச்
சுந்திர நமை பார்ப்பதனாலே — அவ்
விந்திரனிவனோ எதனாலே — இக் கரைமேலே

திடுதிடுதிடுவென ஒடுகின்றான் — திரு
நடனஞ்செய் தடிக்கடி பாடுகிறான் — வேறு
தடைசெய்பவரை கையாற்சாடுகிறான் — இத் ததனோடு

கெக் கெக் கெக்கென சிறித்திடுவான் — ஆ
பக்கமிருப்பவரை இழுத்திடுவான் — ஓடி
திக்கென கரையினிற்குதித்திடுவான் — என் னனியாயம்

பலபலவிதமாய் பேசுகிறான் — இவன்
கலகஞ்செய் தடிக்கடி யேசுகிறான் — நிறை
ஜலம்வரகரையதை மோதுகிறான் — இவ னெவனோமோ

---

**அமைச்சர்கள் வைகை கரை அடைப்புற்று வருவதை பரீக்ஷித்து மேற்பார்த்து வருதலும் வந்தியின் முறை பங்கு கிடப்பதையும் பார்த்து கோபித்தல்.**

(இங்குவந்த கள்ளியாரடி என்ற வர்னமெட்டு.)

தரு.

இந்தபங்குவீதமாரடா இடைக்கிடப்பதேதடா
தங்குஜலமெலா மிந்தவழியாலே
நொங்கும்நுரையுமாய் பொங்கிவழியுதே(இந்)

சாற்றுவீர் அதிசீக்கிரம் தனிக்கிடப்பதுமாத்திரம்
சற்றுநேரத்திலே மற்றக்கரையதும்
தாருமாருய்சென்று ஆராகவோடுதே(இந்)

பிரஜைகள் வசனம்:—ப்ரபுகாள்? அந்தோ? என்ன அந்யாயம் இந் நகரிற்வசிக்கும் வந்தி என்னும் ஓர் கிழ பிட்டுவாணிச்சியின் முறைக்காக ஆளாக வந்தவனும். அன்னவன் இதுநேரம் வரையிற் இன்னவிதமாகிய கலகங்கள் செய்தானென தேவரீரிடம் சொல்ல எங்களுக்கே நாவெழவில்லை. இதனோடு தனது பங்கையுமடையாமற் அம்மரசாற்பிர் படுத்து நித்திரை புரிகிறான் ப்ரபு.

மந்திரிகள் வசனம்:—ஆ இவன்தானு அடே? துஷ்டா இவனை எழுப்பும்.

(ஒட்டனுகிய ஸோமசுந்திரம் நித்திரைவிட்டு எழுந்து வணங்காமற் உட்கார்ந்திருக்கிறார்.)

ஆ இவன்தானு என்ன மனதிடம்? என்ன அலக்ஷியம்! என்ன பெருந்தன்மை பார்த்தீரா.

ஷை தரு வர்னமெட்டு.

ஒட்டனிவனென்னதீரனு ஒடுக்கமிலா சுத்தவீரனு
கெட்டஜாதி இவ னறபபுத்திதனை
தொட்டலவோநம்மை சட்டைசெய்யவில்லை(ஒட்)

**வசனம்:**—ஆ! துஷ்டா! நீயார் நீ எதை முன்னிட்டு இவ்விடம்வந்தாய் என் நீ ஏற்றுவந்த உன்பங்கு வேலைமுடியவில்லை பதில் சீக்கிரம் சொல்.

---

ஒட்டன் த... னைவெறுத்திட்டு கெட்டஜாதியென
வுரைத்த அமைச்சர்கட்கு பதிற்
ஜாதிமுறையைக் கூறுதற்.
(ஆனந்தக்களிப்பு மெட்டு.)
இராகம்-இந்துஸ்தான்-அனுஷிக-தாளம்.

பல்லவி.

ஜாதிப்பேதகந்தன்னைக் கூறும் பாவிச்
சண்டாளரே நூலையாராய்ந்து பாரும் ஜாதி

அநுபல்லவி.

ஆதியிற் ஊர்வசி இடமே வதிஷ்டர்
அவதரித்திட்டது வுயர்வுற்ற ஜடமே
சேதியுரைத்தீரென் னிடமே வியாசர்
செம்பிடமாதிடஞ் செனித்தது திடமே ஜாதி
பூர்வத்திற் புலைச்சியின்புத்ரன் பராசர்
மேதாயனர்முதற் யாவர்க்கு மித்ரன்
ஆர்வத்தார் மகிழ்ந்திட்ட ருத்ரன் விந்து
அஸ்வத்தாமாநல்ல குதிரையின் புத்ரன் ஜாதி
சக்கிலிச்சியலீன்ற பிள்ளை அந்த
தான்த்ரிமுனிவழியைச் சொல்லிட சள்ளை
கக்கிப்புசித்திடுங் கொள்ளை நாய்
கர்ப்பத்திலுதித்திட்டது சௌனகர் வெள்ளை ஜாதி
காங்கேயர் கழுதைக்கேன் பிறந்தார் அந்த
கலைக்கோட்டுமாமுனிப் பிறந்ததெப்படி சிறந்தார்
பங்கத்தவளைவாயைத் திறந்தார் அதுவும்
பாரதுவும்மாண்டவ்யரை பெற்றதையும் மறந்தார் ஜாதி
புல்தின்னும் பசுசெய்த தவமே அதுவும்
புகழுற்ற கௌதமரைப் பெற்றதடா பவமே
விற்பிடியுமரசர்குலம் அவமே சொன்னார்
வெட்கமடா ஆ சீச்சீ வேதனையே சிவமே ஜாதி
இந்தவிதம் ஏற்பட்ட குலமே இதைகண்டு
ஏன்காணு மறியவில்லை நூலினுக்கோர் கலமே
சந்ததம் கலியப்பெருமாள் நலமே சொன்ன
சரித்திரம் நடைவுற்றது மதுரைதிரு தலமே ஜாதி

திடீரென பாண்டியன் வைகை யாற்ற கரையிற் வந்து மந்திரிகளை அணைமறைக்கும் வேலை முடிந்து விட்டதாவென கேட்குமுன்.

(தேசவிசாரணை போன்ற மூடுகு.)

இராகம்-அமிர்தகல்யாணி-தாளம்-ஆதி.

அரசன் கண்ணிகள்.

மேவியவைகையினை யாவருமடைத்திட்டு
வேலைமுடித்திட்டாரா சொல்—மந்திரி
திரவியவெள்ளமது ஊரில்புகுதாவண்ணம்
தன்னிலைப்பட செய்திட்டாரோசொல்

ஆமாத்தியர்.

தேவரீர் தயவாலே யாவருந் தவராமற்
சொற்படி செய்கின்றுரே ஹே தேவா
மேவியகரையினிற் கொஞ்சந்தவிர மற்ருேர்
முடித்து இருக்கின்றுரே

அரசன்.

கொஞ்சமென்றென்னிடத்திற் அஞ்சிசொல்லவந்தீரோ
கோல்முறையாரதிற்குறை சொல் ஜல்தி
நெஞ்சின்றயிரியத்தாற் அந்தவிதஞ்செய்தோரை
நீங்க ளறிவித்திடுவீர்

ஆமாத்தியர்.

கஞ்சிக்கூழென்றலையும் பஞ்சையொருவனெட்டன்
வஞ்சிவாணிச்சியாளாம் ஹே தேவா
கொஞ்சமுமஞ்சிடாமற் இந்தவிதஞ்செய்திட்டான்
கொற்றவன்போ லிருக்கிறுன்

அரசன் வசனம்:—ஆ? என்ன விந்தை! நாம்செய்த ஆக்ஞாபந்தத்தை நிராகரித்து அவ்வளவு அலக்ஷியமாகச் செய்தவன் யாவன். என்ன! அவ்விதஞ் செய்தவனை அதிச்க்கிரம் மடலோடு மடலிணையக்கட்டி இவ்விடம் கொண்டு வாருங்கள் காவலர்களே.




42-வது பக்கம். வைகையாற்றில் வெள்ளம்பெருகி வருதல்—கூலியாளாய் வந்தபகவான் கரையை யடைப்பதும் பாண்டியன் பிரம்பினால் அடிபடுதல்.

காவலர்கள் ஒ... ...னைப்பிடித்திழுத்துக் கொண்டுவருதல்.
(ஜோர், தூ... தூர மைஹோ என்ற வர்னமெட்டு.)
இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ரூபகம்.
கண்ணிகள்.

...ன் நாசகாலபேயா நாங்கள்விடுவோமோ தியா
கூனவாணிச்சிபிட்டை வீணையபகரித்தாய்
தாமதமேனடா மூடா நீமதங்கொண்டவன்வாடா
வாடா அரசனிடம் போடாநிற்காமற்முன்னே
ஓடாமற் நிற்கிறுயோடா

---

ஒட்டனுகிய சிவபெருமான் அஞ்சுவதைப் போற் நடித்தற்.
(மார்கழிமாதம் திருவாதிரை என்ற வர்னமெட்டு.)
இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.
கண்ணிகள்.

ஏனெனைசீறி இவ் வாதைப்படுத்துரீர்
ஏர்க்காதிதுவை யையோ
கோனவரிடத்திற் கொண்டுவிடாதீரய்யா
கோபித்திடுவாரை யையோ

நானே சற்றுநேரத்திற் இக்கரை அடைத்திட்டு
நாடிவருவேனை யையா
வீணுகயெந்தனை நீர் பிடித்துஇழுக்கவேண்டாம்
வயிருபசிக்குதை யையோ

அரசனெந்தனை யடித்துக்
கைகாலொடிந்தார் அவமே ஓர்குடும்பம்
சிறுவரிருவரொடு மனையியலைந்துநொந்து
தியங்கியழுவா ரையையோ

---

அரசனிடம் ஒட்டனுகிய சோமசுந்தரத்தை காவலாளர் கொண்டுவிடுதலும் அன்னவர் நடிங்கினவர்போற் நடித்தலும்.

அரசன் வசனம்:—நீயார்? ஏனுன் பங்குவீதத்தை யடைக்கவில்லை.
(ஒன்றும் பேசாமற் நிற்குரூர்.)

## ஹரிமர்த்தன பாண்டியனாகிய ...ன்
## கோபிக்கிறான்.

அடே! என்ன தைர்யம் யான் கேட்பதற்கு ஒன்றும் பேசாமலும் அசையாமலும் யோகபாவனையாக விருக்கிறாய்.

**இவ்விடம் பாண்டியன்கோபித்து எப்பொருட்கும்**
**இறைவனாகியும் திருவாலவாய் பதி என்னும்**
**க்ஷேத்திரத்திற் எழுந்தருளிய ஸ்ரீசோம**
**சுந்தர கடவுளரான ஒட்டதேவன் முது**
**கிற் தனது வலிமைகொண்ட கரத்**
**தாற் பிரம்பினாற் ஓங்கி அடித்தற்.**

### விருத்தம்.

அண்டமெலாம் தன்னுடலா யமைந்ததிரு சொக்கரவர்
அழுதுவாட
கண்டவர்க ளிதுபாவ மென்றிரங்கப் பொய்வேடங்
காட்டினேரை
மிண்டரவ ரிழுத்தரசன் முன்னிலையிற் கொண்டுவிட
முனிந்துகோமான்
தண்டனையா மெனப்பிரம்பாற் ஐயன்முதுகினி லோங்கிச்
சாடினனே.

### பொது திருவிருத்தம்.

அம்கெங்கைப் புனைவனடி யெங்கும் பிரமாதமாய்
ஆய்னுட லதினுமோதி
யருளொடு நிறைந்தவிதி வீண்முழுது மரளிகுகன்
ஐங்கரன் பரிதிதிங்கள்
தென்றிசைக்கோ னடுவனும்ம கங்கைஸல ஸைமுனி
தேவர்மானிட ரிராக்கர்
செயனுரு விருக்ஷமொடு பக்ஷிஜா திகளூறு
சிற்றெறும்பு கண்மலேகட்டற்
தங்கிடும் புவிதனிற் புற்பூண்டு வூர்வனத்
தானெந்து ஏக்கமாகுந்
தையற் கருசிசு மச்சமாகாய காற்றுவழற்
சாஸ்திர புராணமோடு

சகலுத்... வடித் தாக்கியயர் வுற்றதென
சமயங...ன் முறையிடுதலாற்
தற்பர சிவானந்த மூர்த்தியின் மயமலார்
தான்வேறு மயமுமுளதோ.

வசனம். இவ்வண்ணம் ஹரிமர்த்தன பாண்டியனாற் அடிக்கப்பெற்ற பிரம்படியானது பாண்டியனுக்கும் அவ்விடம் நின்ற மந்த்ரிமுதலிய யாவர்களின் பேரிலும் வீழ்ந்து அவரவர்களும் துடிதுடித்து என்பேரிற்பட்டது என்பேரிற்பட்டதென அவரவர்களும் புகல, மள்ளராகிய சிவபெருமான் அவ்வடியைப்பட்டு ஓர் தட்டு மண்ணை உடைப்பிற் கொட்டிவிட்டு அரூபியாக மறைந்துவிடுகிறார். வைகைகரை உடைப்பும் அடைபடுகிறது ஹரிமர்த்தண பாண்டியன் மிகவும்வியந்து ஸ்ரீசொக்கநாதக் கடவுளே இவ்வண்ணம் வுருவேற்று வந்தவரை தாம் தண்டித்ததனாற் என்ன விளையுமோவென மனம்நைந்து இறங்குகிறான்.

(வேலனே இந்த வினனை ஏன்படைத்தாய் என்ற வர்னமெட்டு.)

பல்லவி.

பாவியா னிந்தப்பாபத்திற் கென்னசெய்வேன்—அந்தோ
படுபாவியென்னடியுன்முது படநைந்திடநொந்ததோ—படு
பாபத்திற் கென்னசெய்வேன்

அநுபல்லவி.

ஆவிப்பதரிடத் தாவியடித்திட
அவமேயிது பவமேஅருள் சிவமேஇது தகுமோ ஈசா
பாபத்திற்கென்னசெய்வேன்

சரணங்கள்.

மள்ளனரப்போற்வந்த வள்ளலேயுந்தனை
எள்ளத்தனையுமென் னுள்ளத்தறிந்திலேன்
வெள்ளப்பெருக்குற்ற கொள்ளையாலுன்திரு
விளையாடலையறியாவினை கனைமூடி இக்கெதியாகிய
பாபத்திற்கென்னசெய்வேன்

நாயினுங்கீழ்கடைப் பாவியானம்பிகைத்
தாயின்மணாளாபொன் மேனியனுன்னடற்
காயம்படபாவி வீசியடித்திட
கயவன்றனக்கெதியேதினி அயனின்விதிப்படியோஇனி
பாபத்திற்கென்னசெய்வேன்

தேடுமயனரி வேத ர்கொண
டாடியவர்முடி ோதியனுதினம்
நீடும்வடுவுற்ற பாதத்தோனுன்மூது
கடையேனெனதடியோபட தருமோ அருள்கடலே சம்போ
பாபத்திற்கென்னசெய்வேன்

அரசன் வசனம்:—ஹே ஜெகதீசா பாவியாகிய யான் அருந்தவமே ஓர் உருவாக வரப்பெற்றுள்ள ஐய்யன் வாதவூரடிகளின் மனச் செய்கையறியாது அன்னவரைக் கொடியக்கண்டனஞ் செய் தும் எங்கும் வியாபித்தும் எங்கட்குல சுமதலையை தனதென் றே ஏற்றுக்கொண்ட குலதெய்வீக சோமசுந்தரேசா உமக் கும் யான் பழிக்காரனுக இக்கர்ம பூமியிற் யான்ஜெனித்து உலகமாயா வசக்த்தத்திற் மூழ்கி பொய்வாழ்வை மெய்யன் றெண்ணி யதனுலல்லோ இப்பழிக்காளாகினேன் அந்தோ? மதுரேசா நான் எத்தனை ஜென்மா எடுத்து எவ்வளவு காலம் மானிடவாழ்விற் உழன்றபோதும் இவ்வினை விடமாட்டாதே இதற்கென் செய்வேன்? பாவியானேனே.

அரசன் விருத்தம்.

மந்திரியாய்வந்தமைந்த வாதவூரடிதேவர் மாண்புதன்னை
சிந்தையினிலுணராமற் மிகவருந்தசெயவுற்ற தீயப்பாவி [செய்த
இந்தவினைகென்செய்வேன் யெனையாளுஞ் சொக்கேசா எளியேன்
பந்தமுளபவம்விலக்கி பரமபதந் தந்தென்னை பரிந்தாள்வாயோ.

வசனம். இவ்விடம் சொக்கநாதர் அசரீரியாக ஆகாயத்திலிரு ந்து ஹே அரிமர்த்தன பாண்டியா? எமது வழிபாட்டிற் கடமைப பட்ட வாதவூரானுகிய அன்பனிடம் நீயீட்டிய பொருள்யாவும் எனக்கே செலவளித்தான் பிறகு உன் நிபந்தனையாற் நாமே காட் டின் நரிகளெல்லாவற்றையும் வும்பர்வுலவாசியாக வரவிடுத்தோம். பிறகு நாமே பரிகளை நரிகளாகச் செய்தோம். பின் நீ எனதன் பனை அண்ணுந்தாளிட்டு பருமணற்சுடவைகையிற் நிறுத்தியகொடு மை எமக்குச் சகியாமற் வைகைபெருகி வரச்செய்ததும் நாமே பின்வந்தி வுள்ளன்பிற்கு வியந்து கூலியாளாகவுருவேற்று பிட்டு வாங்கி அவ்விருசியையும் பெற்றோம் பின் உனதடிக்கொண்டதும் நாமே ஆயினும் நீ அறியாமற் என்னடியவருக்கும் எனக்குஞ்செய்த தீங்கானதாற்பொருத்தேன் நீ அஞ்சேல் அஞ்சேல் இனி சிந்நாட் அரசுபுரிந்து நமது திருவடி நீழலிற் வாழ்வாயாக இப்பொழுது எனதடியாள் வந்தியின் னுள்ளன்பிற்கு மெச்சினேம் அன்னவள் இப்பொழுதே நமதுபதவிவந்து சேறலாம் உடனேமாறிவிடுகிறுர்.

## அரசன... ...ன்னும் கூடற்கோயிற்குள் சென்று ...ஸ்தோத்தரிக்கிருன்.

விருத்தம்.

சிறியோர்கட்செய்தபிழை பெரியோர்கட்பொருப்பரென
செப்பும்நூல்கள்
அறியாமலிழிவினன்யான் செய்தபிழை பொருத்தென்னை
யாட்கொள்வீரோ
எரிவாயிநரகிலிட எமனென்னை இழுத்திடவே
இனிசெய்வீரோ
பரிமாவின்விடையானே மொருவழியுமறியாமற்
பதைப்புற்றேனே.

விருத்தம்.

இந்திரனின் பழிதீர்த்தீர் இசைவாது வென்றிட்டீர் எழிலுற்றேகும்
சுந்தரப்பேரம்பெய்தீர் சோழனையம் மடுவிலிட்டீற் தோன்றிடாத
சங்கத்தோர் கலகமதைத்தான்றீர்த்தீர் தருமிக்குத்தனதாய்வந்தீர்
எங்கள்குலச்சுந்தரமே ஏழைசெய்தகுற்றமிதற் கிரங்குவீரோ.

## இவ்விடம் வந்தியம்மையார் ஈஸ்வரனை தோத்தரிக்கிருர்.

விருத்தம்.

கல்லானைக்கரும்பருந்த கடற்சுவரவேல்விடுக்க கரிக்குவன்று
வில்லெடுத்துவிளையாட விறகெடுக்கவலைவீச மெய்காட்டிட்டு
மெல்லியத்தடாதகையை மணஞ்செய்ய வெண்வேழவினையைதீர்க்க
எல்லாஞ்செய்வல்லசித்தற் றீரல்லாற்வேறொருவ ரியற்றப்போமோ.

திருவாலவாயெனவே செப்பினோரிகந்தனிலே செல்வமேற்பார்
ஒருதினமாயினுமதனை தரிசித்தோர் மறுமையினிற்வுயற்வுற்றுய்வார்
அருமறையோர்தவமுனிவ ரனுதினமும்பணிந்திடு மிவ்வாலவாயிற்
வருநீசராயினுந்தான் பிறந்திட்டாரெவ்விதத்து முயற்வுற்றரே.

இவ்விடம் ஆகாயத்திலிருந்து புஷ்பகவிமானம், வந்தி யென்னும் பிட்டுவிற்கும் அம்மையாருக்கிரங்குதலும், அவ்வம்மையார் அவ்விமானத்திற் ஏறி தேவர்கள் பூமழைசொரிய தெய்வலோகஞ் செல்லுதலும்,

அவ்விடமுள்ள பாண்டியன் முதலிய யாவரும் ஈஸ்பரத் திருவிளையாடலுக்கு வியந்து மகிழ்ந்து ஆனந்தக்கூத்தாடி ஈஸ்வரனை தோத்தரித்துவிட்டு முடிவிற் தத்தம் இடத்திற்கு அவரவர்செல்ல அரசன் ஆக்ஷிமண்டபம் சென்று அரசாக்ஷிபுரிகிருன்.

சம்பூர்ணம்—சம்பூர்ணம்.

குகமயம்.

இந்நூலை ஆக்குவித்த வடியவனின் அன்ப[illegible]ரந்த நண்பன்
தி. கு. பஞ்சநதமென்னும் ஈஸ்வர மெய்யன்புளான்
விரும்பியவண்ணம்.

## ஸ்ரீசுப்பிரமணியர் பேரிற் இயற்றிய பதம்.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

நித்யகல்யாணி பாலனே ஓம் சரவணபவனே
நித்யகல்யாணி பாலனே

அநுபல்லவி.

நித்யகல்யாணிபாலா நிமலா வள்ளிக்குலோலா
பக்தன்கலியப்பெருமாள் பணியுஞ்சண்முகவடிவேலா சண்

சரணங்கள்.

பன்னிருகைபடைத்தவா வளர்முத்தையா
பாடித்துதித்திட்டே னைய்யா இதுவேமெய்யா
கன்னிக்குறத்தியர் துய்யா கண்பாருமைய்யா
கதிர்வேல்பிடித்திட்டீரய்யா கதிர்காமத்தைய்யா
கனகமுடியிெனொளி ஜிலுஜிலுவென
நினையுமுனெனதக இடையினிலமர்திரு நித்யகல்

குஞ்சரித்தழுவும்பாதனே குணபூஷணனே
கோடிசரணஞ்செய்தேனே விண்ணவர்கோனே
விஞ்சையர்துதிக்கும்பாதனே வேண்டினேன்யானே
விமலாவண்டமர்பாலனே விளங்குந்தேனே
விகசிதமயிலினி னடமிடுவருமுக
பிரணவுருகுக கடவுணருபற்திரு நித்யகல்

வாழி.

சீரூறுமிச்சரிதைப்படித்திட்டோர் செவியுணர்ந்தோர்சிறந்துவாழி
காரூறுமகிதலத்திற்இந்நூலை ஆக்குவித்தக்கவிஞன்வாழி
ஊரூறும்படித்தறிய வச்சிட்டக்கன்னிபப்ப னுகந்துவாழி
தேரூறுந்திருமது[illegible] மீனாக்ஷிசொக்கேசன் தினமும்வாழி.

இப்படிக்கு - சேயன்,
உலகோர் சிறுமதலை,
தி. கு. கலியப்பெருமாள்.

## ...ன புத்தகங்களின் விளம்பரம்.

### படுக்கையறைப்பிற... சாங்குசெய்த பங்கஜவல்லி. விலை அணா 8.

பங்கஜவல்லி என்னும் இக்கதாநாயகி, மீமானுகிய சித்தூர்-செல்வகேசவ முதலியாருடைய புதல்வி, இவள் கண்டோர் மையல்கொள்ளத்தக்க கட்டழகியாயிருந்ததோடு தமிழ்க்கடலைவாம் மடுத்துக் கலைமகளென விளங்கி இனிமையான 11 - பிரசங்கங்கஞ்செய்தாள் அப்பதினேறு பிரசங்கங்களை படிக்கிறவர்கள் இங்கிலீஷ் பிரசங்கத்தையும் இங்கிலீஷ் காரரையும் புகழ்ந்து பேசமாட்டார்கள்.

### வி நோ த னி.

இந்த புதிய நாவல் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளது. கற்புள்ள மங்கையரைக்கருதி அதனல் காளையரடையும் துன்பமும், குடும்பத்தின் நிலைமையும், கற்பின் அருமையறியாது பேதமையால் மயங்கிக் கெடும் பெண்களடையும் கதியும் கற்பைக்காத்து இம்மைக்கும் மறுமைக்கும் நற்புகழடையும் நங்கையரின் வல்லமையும் தெளிவுற விளக்கிக் காட்டக்கூடியது.

விலை அணா 8.

### கண்ணுமணி.

இந்த நாவல் கல் நெஞ்சையும் கரையச்செய்யும் ஆற்றலுடையது. அதிக விந்தையும், வியப்பையும் தரக்கூடிய நாவல்களில் இதுவும் முதன்மையானது. விலை அணா 8.

### கோராகும்பார் சரித்திரம்.

இஃது பண்டரி நாதனருள் பெற்று முக்தியடைந்த பக்தர்களில் ஒருவரது திவ்விய சரித்திரம். இதை வாசிப்போர்க்கு தான் இதனுடைய அருமைவிளங்கும். இவரது பக்தியும், வைராக்கியமும், இவர் பண்டரிநாதனை தரிசனஞ் செய்து, அவரால் இழந்துபோன தன் குழந்தையையும், வெட்டுண்ட தன் கரத்தையும் மீளயடைவதும் ஆகிய இவரது சரித்திரத்தை கீர்த்தனைகளாகவும் வசனங்களாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 4.

### அகலிகை சரித்திரம்.

இஃது சென்னை இந்து விநோத சபை தி. நாராயணசாமி பிள்ளை யவர்கள் கம்பெனியின் உபாத்தியாயர் முத்தமிழாகரம் ஏகை-சிவசண்முகம் பிள்ளையவர்களால் டிராமாக்களுக் குரிய நூதன வர்னமெட்டுகளுடனும் வசனங்களுடனும் எழுதப்பட்டதை அச்சிடப்பட்டிருக்கிறது. அகலிகை சாபமுதல் தாடகை சம்மாரமும், ஸ்ரீராமபிரானுடைய பாததுளி பட்டதும் அகலிகை சாபம் நீங்குதல் வரை அடங்கியிருக்கின்றது. விலை அணா 4.

### அ ம ரா வ தி.

இஃது ஓர் இனிய செந்தமிழ்நாவல், இக்கதாநாயகியின் சரித்திரத்தால் படிப்போரின் மனக்கவலையும் கஷ்டமும் பற்றறத் தெளியும். விலை அணா 12.

---

குறிப்பு:—வி-பி-சார்ஜ் தற்காலம் அதிகமாயிருக்கிறபடியால் 1 - ரூபாய்க்கு குன்றந்தசாமான்களை வி-பி-யில் அனுப்பமுடியாது, அப்படி குறைந்த சாமான்களுக்கு ஆர்டர்செய்பவர் ஸ்டாம்புவாங்கி அனுப்பினல் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—மயிலை-கன்னியப்ப முதலியார்,
கிழ்வசெட்டி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை,
மவுண்ட்ரோட், மதராஸ்

